Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org


பார்வை – 47 ஆவணி, புரட்டாதி 2021 பக்கங்கள் – 25 விலை – ரூபா 20.00



## தற்சார்பு நிலையை நோக்கி மக்களைத் தள்ளும் கொரோனா



பயங்கரவாத எதிர்ப்பு
போருக்கு கிடைத்த மரண அடி



பழங்குடிகளை ஆவணப்படுத்தலின்
அவசியம்



கல்வியில் பெருந்தொற்றின் தாக்கம்

– ஆராயும் அறிவே நிமிர்வு –

# தற்சார்பு நிலையை நோக்கி மக்களை தள்ளும் கொரோனா





- துருவன் -

கொரோனா பெருந்தொற்றானது தொடர்ந்தும் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருவதுடன், வெவ்வேறாக திரிபடைந்து வேகமாக பரவியும் வருகிறது. இலங்கை போன்ற நாடுகளில் எதிர் காலத்தில் உணவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆபிரிக்காவின் சில நாடுகள் மீண்டும் பெரும் பட்டினிச் சாவை எதிர் கொள்ளத் தொடங்கி விட்டன.

உலகமயமாக்கல் முடிவுக்கு வந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. எங்களது தாத்தா, பாட்டி காலங்களிலும் அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் எமது பிரதேசங்களில் தற்சார்பு பொருளாதார நிலை ஒன்று வலுவாக இருந்தது. அது எஞ்சியதை பண்டமாற்று அடிப்படையில் அயலவர்களோடு பகிரும் உயர்ந்த பண்பாடாகவும் இருந்தது.

ஆனால் கடந்த 60 ஆண்டுகளாக நாளாந்த சிறு உணவுக்கு கூட இன்னொரு நிறுவனத்தின் அல்லது அரசின் கையை எதிர்பார்த்து வாழப் பழகி விட்டோம். அன்றிலிருந்து எமக்கு நஞ்சற்ற ஆரோக்கியமான உணவு கிடைப்பது குறையத் தொடங்கியது. அதுமட்டுமல்ல, சிறிது சிறிதாக தற்சார்பு பொருளாதாரமும் காணாமல் போனது. பணத்தை கொடுத்து எல்லாவற்றையும் வாங்கிவிட முடியும் என்ற மனோநிலை அனைவர் மத்தியிலும் விதைக்கப்பட்டது. நன்றாக படித்து அரச வேலையில் சேர்ந்தால் காலம் பூராகவும் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம் என்கிற நச்சு மனப்பான்மையும் நம் பிள்ளைகள் மேல் திணிக்கப்பட்டது. இன்று, அரசாங்கம் நடாத்துவதற்கு கூட நிதி இல்லாமல் அல்லாடும் நிலையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் பாதியாகக் குறைக்கப் படலாம் என்கிற தகவலை அரச மட்டங்களில் உள்ள அமைச்சர்களே பகிரங்கமாக கதைக்கும் நிலை உருவாகி விட்டது. இப்போது அரச தொழிலில் உள்ள பலரும் உணவுத்தேவைக்கு ஏதாவது பயிரிடுவோம் என்கிற நிலைக்கு வந்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்று பரவலும் சமூக முடக்கமும் பணத்தால் எதையும் வாங்க முடியும் என்ற மனநிலைக்கு வேட்டு வைத்துள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவில் பெரும் பணம் வைத்திருந்தவர்கள் கூட உணவில்லாமல், உரிய மருத்துவ வசதிகள் கிடைக்காமல் உயிரிழந்தனர். இந்த நெருக்கடிகள் மக்களை தற்சார்பை நோக்கி தள்ளியது. தனியே ஏட்டுக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாமல் உங்கள் பிள்ளைகளுக்கு உணவை எப்படி உற்பத்தி செய்வது என்பது குறித்தும் அடிப்படையாக சொல்லிக் கொடுங்கள் என அழுத்தமாக உணர்த்தியது.

சில ஆண்டுகளுக்கு முன் சுன்னாகம் நலன்புரி முகாமில் வாழும் மயிலிட்டியை சேர்ந்த வயதான மூதாட்டி ஒருவருடன் உரையாடிய போது, விவசாய பொருளாதாரமும், மீன் பிடி பொருளாதாரமும் ஒருங்கே சேர்ந்த பிரதேசம் அவர்களுடையது. விவசாயிகள் தாங்கள் விளைவித்த பூசணிக்காய், மரவள்ளிக் கிழங்கு, முருங்கைக்காய், மிளகாய் போன்ற பொருட்களை மீனவ மக்களிடம் பண்டமாற்று அடிப்படையில் கொடுத்து அவர்களிடம் இருந்து தங்களுக்கு தேவையான மீனைப் பெற்றுக் கொள்ள முடிந்தது என தெரிவித்தனர். அந்த வாழ்க்கை திரும்பி வராதா என அவர் ஏங்கியமையையும் அவதானிக்க முடிந்தது.

அதே போல் ஏழாலையை சேர்ந்த 90 வயதைத் தாண்டிய விவசாயி ஒருவரிடம் பேசிய போது, இயற்கையோடு ஒன்றி இயல்பாகவும் ஆரோக்கிய

மாகவும் வாழ்ந்த எங்கள் வாழ்க்கை எப்படி நெருக் கடிக்குள்ளானது என்பதையும் கூறினார். இங்கே முதன்முதல், யூரியா, இரசாயன மருந்துகள் அறிமுகப் படுத்தப்பட்ட விதங்களையும் கூறினார். தாங்கள் சிறிய வயதிலிருந்து குரக்கன், சாமை போன்ற சிறுதானியங்களையும் இயற்கையாகவே விளைவிக் கப்பட்ட எங்களின் பாரம்பரிய மரக்கறிகளையும் உண்டு வந்ததாகவும் அதனாற்தான் இன்றும் ஆரோக் கியமாக இருப்பதாகவும் கூறினார்.

ஏற்கனவே போர்க்காலங்களில் தற்சார்பு நிலை யில் இருந்த எமது கிராமங்கள் கூட இன்று சமையல் எரிவாயு மற்றும் பால்மா இல்லாத போது பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதை அவதானிக்க முடிந்தது. போர்க்காலங்களில் பொருட்களின் விலை யேற்றங்களும் பலமடங்கில் இருந்தன. பல பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாமல் தடைகளும் இருந்தன. அந்த நேரங்களில் எல்லாம் எல்லாவற்றுக்கும் மாற்று ஒன்றை வைத் திருந்து வளமாகவே வாழ்ந்து வந்தோம். இன்று ஒரு நாள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு என்றால் கூட எப்படி சமைப்பது என பதறி விடுகிறோம்.

இங்குள்ள வயதானவர் ஒருவர் சொன்னார். ‘முந்தி என்றால் தம்பி, இந்த பனைமட்டை, கங்கு, ஊமல், தென்னைமட்டை, பாளை, வேலியில் பட்டுப்போன கதியால்கள் ஒன்றும் இருக்காது. ஏனெனில் மாலை நேரங்களில் அவற்றை சேகரித்து கொண்டு போய் வீடுகளில் விறகெரிப்பார்கள். ஆனால் இப்போது எல்லா இடங்களிலும் இவை கேட்பாரின்றி இருக்கின்றன.’ கிராமப்புற மக்கள் கூட இவற்றை தீண்டு வதில்லை. எல்லா இடமும் சமையல் எரிவாயு மய மாகி விட்டது. மழைக்காலங்களிலும், அலுவலகம் செல்லும் அவசரமான தருணங்களிலும் சமையல் எரி வாயுவை பயன்படுத்திக் கொண்டு மீதி நேரங்களில் சுற்றுச் சூழலில் உள்ள விறகுகளை சமையலுக்கு பயன்படுத்தலாமே.

மேற்கு நாடொன்றில் இருக்கும் நண்பர் ஒருவர் சொன்னார். தங்கள் பகுதிகளில் விறகடுப்பு மூலம் சமைக்கப்பட்ட உணவுகளுக்கு கட்டணம் அதிகம் என. உண்மை தான் மேற்கின் சில கிராமங்கள் தற்சார்பை நோக்கி வேகமாக திரும்புகின்றன. ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் கூட புறநகர் பகுதிகளில் வாராந்தம் இடம்பெறும் விவசாயிகள் சந்தை (farmers market)

**“போர்க்காலங்களில் பொருட்களின் விலை யேற்றங்களும் பலமடங்கில் இருந்தன. பல பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாமல் தடைகளும் இருந்தன. அந்த நேரங்களில் எல்லாம் எல்லா வற்றுக்கும் மாற்று ஒன்றை வைத்திருந்து வளமாகவே வாழ்ந்து வந்தோம்”**

களில் தமக்கு தேவையான சமையற் சாமான்களை மக்கள் விரும்பி வாங்கிச் செல்லும் நிலை உள்ளது. தங்கள் பகுதி விவசாயிகளிடம் நேரடியாக இயற்கை யான உற்பத்திகளை வாங்குவோம் என்ற மனநிலை உருவாகி விட்டது.

ஆனால் இங்கே நிலை மாறி உள்ளது. உதாரண மாக நீர்வேலியிலோ, உரும்பிராயிலோ உள்ள விவசாயி தங்களது மரக்கறிகளை மருதனார் மடம், திருநெல்வேலி போன்ற சந்தைகளுக்கு சென்று விற்கின்றனர். வேறு சிலர் நேரடியாக தெற்கில் உள்ள பொருளாதார மத்திய நிலை யத்துக்கு அனுப்பி விடுகின்றனர். இங்கிருந்து செல்லும் சின்ன வெங்காயம் பின் பல்வேறு இடைத் தரகர்களின் கைகளுக்கு சென்று திரும்பவும் அதிகரித்த விலையில் இங்கே வருகிறது. பின்னர், குறிப்பிட்ட பிரதேசங்களை சேர்ந்த மக்கள் நேரத் தையும், எரிபொருளையும் செலவழித்து சந்தைகளுக்கு சென்று வாங்குகின்றனர். எமது பிரதேசங்களில் கொரோனா கொத்தணிகள் முதலில் இவ்வாறான சந்தைகளில் இருந்தே ஆரம்ப மாகின. பிரதேச சபைகள் ஊடாக ஒவ்வொரு பிரதேசத் திலும் உழவர் சந்தைகளை ஏற்படுத்தினால் விவசாயி கள் நேரடியாக கொண்டு வந்து விற்கும் நிலை உரு வாகும். இதன் மூலம் இடைத்தரகர்கள் கொள்ளை யடிப்பதும் குறையும்.

பொதுவாக கிராமங்களில் உள்ள வீடுகளில் பெரும்பாலும் போதியளவு நிலப்பகுதி இருக்கும். சிறிய திட்டமிடல் இருந்தாலே போதும். அதில் ஒரு பகுதியில் வீட்டுக்கு தேவையான மரக்கறி வகைகளை பயிரிடலாம். இன்னொரு பகுதியில் மூலிகைத் தாவரங்களையும், அடுத்த பக்கத்தில் பயன்தரு பழ மரங்களையும் நாட்டினாலே எமது நாளாந்த நுகர்வுக்கான உணவு குறிப்பிட்ட காலங்களில் வந்து சேர தொடங்கி விடும்.

**(22 ஆம் பக்கம் பார்க்கவும்)**

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

ஆசிரியர் பார்வை

# வடக்குக்கு ஒரு நீதி தெற்குக்கு ஒரு நீதி தொடரும் சிறீலங்காவின் அரச பயங்கரவாதம்

சிறீலங்கா ஜனாதிபதி ஐ.நா பொதுச் செயலாளரை சந்தித்து உள்நாட்டு பொறிமுறைக்குள் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் கருத்துரைத்திருந்தார். அதற்கடுத்த நாளே சாதாரண நினைவு கூரல் உரிமை கூட உங்களுக்கு கிடையாது என இலங்கை அரசின் ஒற்றையாட்சி நீதித்துறை மூலம் காட்டுமிராண்டிகளாக நல்லூரடியில் நடந்து கொண்டு நிரூபித்துள்ளனர் சிறீலங்கா காவல்துறையினர்.

நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பது பற்றியெல்லாம் ஐக்கியநாடுகள் சபையில் கோத்தபாய கதையளந்த மறுநாளே தமிழ் மக்களின் அடிப்படையான நினைவேந்தல் உரிமை பலாத்காரமாக மறுக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் சிறைக்குள் நள்ளிரவு சென்று தமிழ் அரசியல் கைதிகளின் நெற்றியில் துப்பாக்கியை வைத்த லொஹான் ரத்வத்த இன்றும் ஒரு இராஜாங்க அமைச்சில் பதவியை சுகபோகத்துடன் தொடர்கிறார். தியாக தீபத்துக்கு விளக்கேற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பொலிஸாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்படுகிறார்.

நினைவு கூரல் என்பது கூட்டு துக்கத்தை ஆற்றுகின்ற செயன்முறையாகும். நல்லிணக்கத்தின் மிக முக்கிய கூறாகும். மக்களின் அடிப்படை உரிமையான நினைவேந்தல் உரிமையை சப்பாத்துக் கால்களால் நசுக்கும் பேரினவாதம் ஐ.நாவில் பேசுவதெல்லாம் சாத்தான் வேதம் ஓதிய கதை தான்.

தமிழ்மக்கள் மீது காலம் காலமாக தொடரும் பேரினவாத அடக்குமுறை தொடர போகின்றது என்பதற்கு மிக அண்மைய உதாரணம் தான் நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட்டமையாகும். நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும் போது இலங்கையில் காவல்துறையினருக்கு உள்ள பிரச்சினை உயிர்நீத்தவரை நினைவு கூர்ந்து யாராவது விளக்கற்றி விடுவார்களா என்பது தான். அதனை எப்படியாவது நீதிமன்ற தடை மூலமாகவாவது நடக்க விடாமல் செய்ய வேண்டும் என்பதுதான்.

வெறுமனே ஈழத்தமிழர் இனப் பிரச்சினை என்பது வெறும் பேசுபொருளாக சர்வதேச ரீதியில் இருப்பதற்கு மட்டும் வேண்டுமானால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, பொதுச் சபை போன்ற களங்கள் பயன்படுமே தவிர இவற்றால் வேறொன்றும் ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

இலங்கைக்கு GSP வரிவிலக்கு வழங்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் புரட்டாதி 27 இங்கு வருகிறார்கள். அவர்கள் இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பேசவிருப்பதாகதெரிவிக்கப்படுகிறது. அவர்கள் பல்வேறு அரசியற் தலைமைகளையும் சந்திக்க இருக்கிறார்கள். தமிழ் அரசியற்தலைமைகள் ஒரு முகத்துடன் தமிழர்கள் அன்றாடம் சந்திக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி அவர்களுடன் பேச வேண்டும்.

சிறிலங்கா அரசுக்கு பொருளாதார ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்று புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை பலகாலமாக கோரி வருகின்றன. அது இந்த முறையாவது நடக்கும் என்பது சந்தேகத்துக்கு இடமானது. என்றாலும், ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் தோல்வியை அடுத்து இலங்கை மீது மேலும் இறுகும் சீனாவின் பிடியை கையாள ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான பாதையைத் தேர்ந்தெடுக்குமா அல்லது வழமை போல தனது நலன்களுக்காக மனித உரிமையை ஒரு சுலோகமாக மட்டும் பயன்படுத்துமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

- செ. கிரிசாந் -

# சக்கர நாற்காலியில் இருந்துகொண்டே ஊடகவியலை செழுமையுறச் செய்த பிரகாஷ் எனும் ஆளுமை



சுயாதீன இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷ் கொரோனோ தொற்றுக்கு உள்ளான நிலையில் கடந்த 02.09.2021 அன்று உயிரிழந்தார். 26 வயதான பிரகாஷ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயால் பாதிக்கப்பட்டு, பத்தாவது வயதில் நடக்கும் சக்தியை முற்றாக இழந்த காரணத்தினால் பாடசாலைக் கல்வியை தரம் ஐந்துடன் நிறுத்தியிருந்தார்.

1995 ஆம் ஆண்டு, மார்ச் 2 ஆம் திகதி நான்காவது பிள்ளையாக பிரகாஷ் கொடிகாமத்தில் பிறந்தார். ஆறு வயது வரையிலும் இயல்பாக இருந்த அவர் கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து குடும்பத்துடன் உரும்பிராயில் வசித்த போது அங்குள்ள பாடசாலையில் படித்து வந்தார்.

அந்த நேரம் விளையாட்டுப் போட்டியொன்றின் போது ஆசிரியரால் பாதிப்பு அவதானிக்கப்பட்டு பெற்றோருக்கு சொல்லப்பட்டது. அவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் உடனடியாக என்ன நோய் என கண்டுபிடிக்கப்படவில்லை.

ஏழு வயதிலும் கால்கள் மடிந்து விழுந்து பின்னர் எழுந்து நடக்கக் கூடியதாக நோயின் ஆரம்ப கட்டம் இருந்தது.

இறுதியாக காலில் இருந்து தசைப்பகுதி ஒன்று சத்திரசிகிச்சை மூலம் வெட்டி எடுக்கப்பட்டு கொழும்பிற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட போது தான் நோய்த் தாக்கமானது தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) என்று கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு மருந்து இல்லை என்றும் வளர வளர நோய்த் தாக்கமும் தீவிரமாகும் என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர்.

– நிமிர்வு –

பின்பு படிப்படியாக நோயின் தாக்கம் அதிகரித்த போது பத்து வயதில் கால்கள் முடங்கி விட முற்றாக நடக்க முடியாத நிலைக்குச் சென்றார்.

அதன் பின்பும் தனது முழுமையான நடமாடும் முடக்க நிலையை எண்ணி தொடர்ந்தும் வருந்தாமல் கணனி அறிவையும் வளர்த்துக் கொண்டு இணையங்கள், சமூகவலைத்தளங்கள் ஊடாக ஊடகவியல் அறிவையும் படிப்படியாக வளர்த்து பல்வேறு ஊடகங்களுக்கும் செய்திக் கட்டுரைகள், செய்திக் குறிப்புகளை எழுதியதோடு மட்டுமல்ல, தான் கேள்விப்படும் நாளாந்த செய்திகளையும் உறுதிப்படுத்தி சமூகவலைத்தளங்கள் ஊடாக உடனுக்குடன் பகிர்ந்து வரும் ஊடகவியலாளராக தனது வாழ்வை மாற்றிக் கொண்டார்.

ஏராளமான முகநூல் வாசகர்கள் உறுதிப்படுத்தி வெளியிடும் இவரது செய்தியை உடனே நம்பி தாங்களும் ஏனையோருக்கு பகிர்ந்து வந்தனர். இதன் மூலம் ஏராளம் இளைய தலைமுறையின் நம்பிக்கையான செய்தி மூலமாகவும் விளங்கினார்.

சம்பள உயர்வு கோரி போராடிய மலையக மக்களுக்கான ஆதரவு போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்த முன்னின்று உழைத்தார். நீதி கோரி நிற்கும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டங்களிலும் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்ததுடன் அதனை தனது எழுத்துக்கள் மூலம் மக்களிடம் பரவ செய்திருந்தார்.

தான் மரணித்த பின் தன் உடலை தானமாக ஏற்குமாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் கடந்த வருடம் விண்ணப்பித்திருந்தார். இறுதியில் கொரோனா தொற்றினால் மரணித்ததால் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

25.10.2018 ஆம் ஆண்டு 'பிரகாஸ் எனும் நான்' எனும் தலைப்பில் தன்னைப் பற்றியும் , தன்னை தாக்கிய நோய் பற்றியும் முகநூலில் பகிர்ந்தார்.

கொரோனா நோய்த் தாக்கம் தீவிரம் பெற்று வரும் நிலையில் தங்களைப் போன்ற நோயாளிகள் பலியெடுக்கப்படும் அபாயம் உள்ளதை முன்கூட்டியே பதிவு செய்திருந்தார். அவர் தனது முகநூலில் 16.05.2021 அன்று எழுதிய பதிவு,

**"எமக்கான பாதுகாப்பு?"**

மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளிகள் சாதாரண மாகவே குறைந்த ஆயுள் காலத்தைக் கொண்ட வர்கள். அந்த ஆயுள் காலம் வரையும் வாழப் போராடுபவர்களாக அவர்கள் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் கொரோனா எனும் பெருந்தொற்று இந்த நோயாளிகளுக்கு மேலு மொரு எதிரியாக வந்திருக்கின்றது. சளி தொடர் பிலான பிரச்சினையே மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளி களின் உயிரையெடுக்கும் ஆயுதமாக இருப்பதால், சளி நோய் நிலைமையினைக் கொண்ட கொரோனா பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

எனது தேடலுக்கு எட்டியதுவரை இலங்கை, இந்தியா, ஏனைய வெளி நாடுகளில் உள்ள மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளர்கள் நான் உட்பட கொரோனா நிலைமையினால் மிக அதிகமாக அச்சமடைந் துள்ளனர். 'நாங்கள் இறந்து விடுவோமா?, எங்களுக்கு தடுப்பூசி கிடைக்குமா?, அதை பெற்றுக் கொள்வது ஆபத்தில்லையா?' என்பது அவர்களுக் குள் பரந்துபட்ட கேள்வியாக காணப்படுகிறது.

ஆனால் மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளி களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவது பற்றிய ஆய்வுகளோ பாதுகாப்பது தொடர்பான திட்டங்களோ தனித்துவமாக செய்யப்படவில்லை என்பதை என் னுடைய தேடல் காட்டுகின்றது. மஸ்குலர் டிஸ்ரோபி தொடர்பான அமைப்புக்கள் சில மட்டுமே சில ஆய்வு களை வெளிப்படுத்தியுள்ளன. அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன. பிற நாடுகள் உள்ளூர் மட்டத்தில் எவ்வாறு இதனை கையாளுகின்றன என்பது தெரிய வில்லை.

எமது நாட்டைப் பொறுத்தவரை மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளிகளுக்கு தடுப்பூசி ஏற்றுதல் பற்றி எந்தவொரு ஆய்வுகளும் செய்யப்படவில்லை. அதற்கு பதிலாக பாதுகாப்பு திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவில்லை. மொத்தத்தில் இப்படி யும் நோயாளிகள் உள்ளனர் என்பதை மறந்துவிட்டார் களோ என்று கேட்க தோன்றுகிறது.

ஏற்கனவே குறைந்த ஆயுளை வைத்து போராடிவரும் மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளிகளுக் கும் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகளை ஏற்றுவதை சாத்தியமாக்க இந்த நோயாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி பாதுகாப்பானதா என்பதை மருத்துவ சபையின் ஊடாக ஆராய்ந்து உறுதிப் படுத்தி, நோயாளியின் நோய் நிலைமையை பரி சோதித்து தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளிகளின் விருப்பத்துடன் எமது அரசு முன்னெடுத்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணப்பாடு.

ஆனால் அப்படியொரு விசேட கவனிப்பு எம் மீது காட்டப்படுமா என்பது கேள்விக்குறியே. அதனைச் செய்யவில்லையென்றால் இந்த நோயாளி கள் உள்ள குடும்பத்தினருக்கு கொரோனா நோய் தொற்று ஆபத்து வரும் போதேனும் மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளியை காப்பதற்காகவும், மன அழுத்தத்தை குறைக்கவும் குடும்ப உறுப்பினர்களுக்கு தொற்று உள்ளதா இல்லையா என்பதை விரைவாக உறுதி செய்வதற்கான வழிமுறைகளேனும் அவசியம். அந்தக் குறைந்த சலுகையை கூட பெற முடியாத நிலை யில் தான் நிலைமை இருக்கின்றது. இது மஸ்குலர் டிஸ்ரோபி நோயாளிகள் மட்டுமல்ல ஆபத்தான நோய்களுடன் இருப்பவர்கள் உள்ள குடும்பங் களுக்கும் அவசியமானது.

அதிகளவில் பிசிஆர் பரிசோதனை களை செய்வதற்கான பிசிஆர் இயந்திரங்களுக்கு பற்றாக்குறை இருப்பதால் பிசிஆர் மாதிரிகள் விரைவாக பெறப்பட்டும் பல நாட்கள் கடந்த பின்னரே அவை ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. அவ்வாறான நிலைமை இருக்கும் போது எம்மை போன்றவர் களுக்கான முன்னுரிமை செயற்திட்டங்கள் நிச்சயம் இருக்க வேண்டும். நான் கொரோனா தொற்றுக்கு உள்ளானால் கூட எனக்கான பரிசோதனை முடிவும் காலம்கடந்து தான் கிடைக்குமோ என்னமோ தெரிய வில்லை. எங்களுக்கு கொரோனா தடுப்பூசியும் இல்லை. சலுகையும் இல்லை என்பது தான் வெளிப்படையான உண்மை.

# பயங்கரவாத எதிர்ப்புப் போருக்கு கிடைத்த மரண அடி



ப்ராமா செலானி
(Brahma Chellaney, New Delhi, https://www.project-syndicate.org)

**“பைடனின் வரலாற்றுத் தவறு தலிபானை ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போர் இந்தத் தோல்வியிலிருந்து மீளவே முடியாமற் போகும்”**

ஆப்கானிஸ்தானை தலிபான் கைப்பற்றியது நவீன உலகத்தில் ஜிஹாத் போராட்டத்துக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். இது உலகெங்கும் உள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளை கவர்ந்திழுக்கும் ஒரு பெரிய பயங்கரவாத நாட்டின் தோற்றத்துக்கு வழிவகுக்கும். அமெரிக்காவின் தலைமையிலான பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போர் இந்தப் பின்னடைவிலிருந்து மீள முடியாது. இந்தப் பின்னடைவு தற்போதைய அமெரிக்க அதிபர் பைடன் பதவியேற்பதற்கு முன்னரேயே ஆரம்பித்து விட்டது.

அமெரிக்காவின் தலைமையிலான பயங்கர வாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போர் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் நடந்த புரட்டாதி 11 தாக்குதல்களின் பின்னர் முன்னெடுக்கப் பட்டது. இந்தப் போர் தற்போதைய அமெரிக்க அதிபர் பைடன் பதவியேற்பதற்கு முன்னரேயே தடுமாறத் தொடங்கி விட்டது. பைடனின் வரலாற்றுத் தவறு தலிபானை ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போர் இந்தத் தோல்வியிலிருந்து மீளவே முடியாமற் போகும். 2001 ஆம் ஆண்டிலிருந்து 2000 இற்கும் மேலான அமெரிக்க வீரர்களை பலி யெடுத்த உலகின் மிகக் கொடூரமான பயங்கர வாதிகளின் கொடி புரட்டாதி 11 தாக்குதலின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளில் காபுலின் மீது பறந்து கொண்டிருக்கிறது.

தலிபானுக்கு அதிகாரத்தை விட்டுக் கொடுத்த தன் மூலம் உலகெங்கும் உள்ள இஸ்லாமிய தீவிர வாத குழுக்களுக்கு பலத்தை அதிகரித்துள்ளார் பைடன். இதன் மூலம் உலகெங்கும் பயங்கரவாதத்தின் மீழெழுச்சிக்கான சாத்தியக்கூறுகள் அதிகரித் துள்ளன. தனது நட்புநாடான ஆப்கானிஸ்தானை கைவிட்ட பைடனின் செயல் மற்றைய நட்புநாடுகளை தாமும் கைவிடப்படுவோம் என்று சிந்திக்க வைத் துள்ளது.

ஜிஹாத் போராளிகளுக்கு கிடைத்த இந்த மிகப் பெரும் வெற்றி மிக விரைவில் ஓர் உச்ச பயங்கர வாத நாட்டின் உருவாக்கத்துக்கு வழிவகுக்கும். உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய தீவிரவாதிகள் பயிற்சிக்காக ஆப்கானிஸ்தானை நோக்கி ஈர்க்கப் படுவர். அதன் பின்னர் தத்தமது நாடுகளுக்குத் திரும்பி தாக்குதல்களை மேற்கொள்வர். தலிபானின் “இஸ்லாமிய அமீரகம் (Islamic Emirate)” ஒரு சர்வதேச “இஸ்லாமிய கலீபா (Islamic Caliphate)” விற்கு அத்திவாரம் இட்டு விடும். இந்த இஸ்லாமிய கலீபாவைத் தான் முன்னாள் அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனும் அவரது சீடர்களும் வேண்டி நின்றனர்.

இதே கலீபாவைத்தான் “இஸ்லாமிய அரசு (ISIS)”உம் வட சிரியாவிலும் ஈராக்கிலும் சிறிது காலம் நிறுவி வைத்திருந்தது. ஆனால் அந்தக் கலீபா அந்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடம் காரணமாகவே சாத்தியப்பட்டது. ஆனால் தலிபானின் அமீரகமோ உலகின் வலிமைமிக்க வல்லரசை வீழ்த்தி அமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில்

தலிபானின் வெற்றி உலகெங்கிலும் உள்ள ஜிஹாத் போராட்டக் குழுக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கும். புதிய உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள வழி சமைக்கும். அதன் விளைவுகளை இவ்வுலகம் பல ஆண்டுகளாக எதிர் கொள்ள வேண்டி வரும். மத்திய கிழக்கிலிருந்து தொடங்கி, தென் ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா வரை பல முனை களில் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நடத்த வேண்டி இருக்கும். இது மேலும் கடினமான தாக இருக்கும்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துரித வீழ்ச்சி அது ஏனைய நாடுகள் மீது தனது அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கான கொள்திறனை சரிவடையச் செய்துள்ளது. இது சீனாவின் சர்வதேச ரீதியான விரி வாக்கத்தை ஊக்குவிக்கிறது. அவருக்கு முன்னாள் இருந்த அதிபர் ட்ரம்ப் போல பைடனும் இராணுவ ரீதியான பின்வாங்குதல்களை மேற்கொண்டு வரு கிறார். அவர் இந்த வருடம் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை மீளப் பெற்றுக் கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா பெருமளவு வளங்களை செலவழித் துள்ளது. பல நாடுகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் புரௌன் பல்கலைக்கழகம் (Brown University) அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் புரட்டாதி 11, 2001 இற்குப் பின்னரான யுத்த நடவடிக்கைகளில் அமெரிக்கா 8 ட்ரில்லியன் டொலர்களை செலவிட்டி ருப்பதாகவும் 900,000 உயிர்களை பலி கொடுத் திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இவை எதுவும் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய பயனை இதுவரை தரவில்லை.

**“தலிபானின் வெற்றி உலகெங் கிலும் உள்ள ஜிஹாத் போராட்டக் குழுக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கும். புதிய உறுப்பினர் களை சேர்த்துக் கொள்ள வழி சமைக்கும்”**

இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கா புரட்டாதி 11 தாக்குதல்களிலிருந்து கற்ற பாடங்களை மறந்து விட்டது. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் துரிதமாக முடியக் கூடியதல்ல என்பதை மறந்து விட்டது. இதன் காரணமாக இந்த யுத்தம் உள்ளூர் அரசியலுக்கு பலியாகி விட்டது. தீவிர வாத ஜிஹாத்துக்கு எதிராக கொள்கை ரீதியான தும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான போர் ஒன்று தொடுக்கப்படுவதை முடக்கி விட்டது.

பைடன் தன் பங்குக்கு “நல்ல பயங்கரவாதி கள்”, “கெட்ட பயங்கரவாதிகள்” என்று வித்தியாசம் இருப்பதாக பாசாங்கு செய்கிறார். இதன்மூலம் தலிபான் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியதையும் தனது நிர்வாகம் அவர்களுடன் சமரசம் செய்ய முற்படுவதையும் நியாயப்படுத்தப் பார்க்கிறார். உதாரணமாக ISIS-K (ஆப்கானிஸ்தான் ISIS) தலி பானின் பரம எதிரி என்று சொல்கிறார். அதன் மூலம் தலிபானை நல்ல பயங்கரவாதிகள் என்று சித்த ரிக்க முனைகிறார். ஆனால், அல் கொய்தா போல, ISIS போல தலிபானும் சனநாயக உலகத்திற்கு பரம எதிரி என்பதை ஒப்புக் கொள்ளத் தவறுகிறார். அதேபோல, காபுல் விமான நிலையத்தில் அண்மை யில் நடந்த கொடூரமான குண்டுத் தாக்குதலு–க்கு ISIS-K மட்டுமே காரணம் என்று சொல்கிறார். அந்தத் தாக்குதலில் தலிபானிற்கு இருக்க வேண்டிய பொறுப்புக்கூறலிலிருந்து அவர்களை விடுவிக்கிறார். மேலும் அமெரிக்க இராசாங்க அமைச்சர் அந்தனி பிலிங்கன் (Antony Blinken) அமெரிக்க பயங்கர வாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் காபுலின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், தலிபான், அல் கொய்தா மற்றும் ISIS-K என்பவை தீவிரவாத ஜிஹாத் எனும் ஒரே கொள்கையை உடையவர்கள். இக்குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து பழகிக் கொள்வார்கள். ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவுக்கு தாவவும் செய்வார்கள். தலிபான் வெற்றி பெற்றபின் சிறை வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ISIS-K உறுப்பினர்களை விடுவிக்கப்பட்டு விட்டதை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சே (Pentagon) ஒப்புக் கொண்டுள்ளது. அண்மைக்கால ஐ.நா. அறிக்கை தலிபானும் அல் கொய்தாவும் நெருக்க மாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறது.

**"அமெரிக்கா புரட்டாதி 11 தாக்குதல்களிலிருந்து கற்ற பாடங்களை மறந்தது பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போரை தடம் புரள வைத்து விட்டது. அதனை மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றி ஓடவைப்பது ஒரு மிகப் பெரிய சவால்"**

அதேவேளை, அமெரிக்க இராசாங்க திணைக்களம் தலிபானும் அதன் விசேட படை ஹக்கானி குழுமமும் இரு வேறு குழுக்கள் என்ற கதையை இட்டுக்கட்ட நினைக்கிறது. ஒரு வகையில் தலிபானும் ஹக்கானி குழுமமும் பாகிஸ்தானில் உள்ள ரசின் முகவர்கள். ஹக்கானி குழுமத்தின் தலைவரான சிராஜ் டின் ஹக்கானி தலிபானின் உபதலைவர் ஆவார். தலிபான் தனது அரசாங்கத்தை அறிவிற்க முன்னரேயே பாகிஸ்தானின் உளவுப் பிரிவின் தலைவர் காபுலுக்கு வந்திருந்தார். இது ஆப்கானிஸ்தானில் உண்மையில் வெற்றியடைந்திருப்பது பாகிஸ்தானே என்பதைக் காட்டுகிறது. இதனூடாக பாகிஸ்தான் தனது அயல்நாட்டைத் தனது பிடிக்குள் கொண்டு வந்துள்ளது.

ஆனால், பூகோள அரசியலை வைத்துப் பார்க்கும் போது பைடன் அரசாங்கம் பாகிஸ்தானைத் தண்டிக்கும் என்பது சந்தேகமே. மறுபுறத்தில், காபுலின் மதவாத சர்வாதிகாரிகளுடன் உறவை உண்டாக்க, அமெரிக்கா பாகிஸ்தான் மீதும், இன்னுமொரு நீண்டகால ஜிஹாத் ஆதரவு நாடான கட்டார் மீதும் தங்கி நிற்கிறது.

புரட்டாதி 11 தாக்குதலை நடத்திய பின்லேடனுக்கு களம் அமைத்துக் கொடுத்த அதே தலிபானுக்கு ஆப்கானிஸ்தானைத் தாரை வார்த்துக் கொடுத்ததன் மூலம் அமெரிக்கா ஒரு முழுச் சுற்றைப் பூர்த்தி செய்துள்ளது. 1980களில் இருந்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுடன் அமெரிக்காவுக்கு இருந்த சர்ச்சைக்குரிய தொடர்புகளின் விளைவாகவே அந்தத் தாக்குதல்கள் நடந்தன. அப்பொழுதிருந்த அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரேகன் (Ronald Reagan) இஸ்லாத்தை ஒரு கோட்பாட்டு ஆயுதமாகப் பயன்படுத்தி ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தை ஊக்குவித்தார். பின்லேடன், ஹக்கானி குழுமத்தை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் அமெரிக்க உளவுத்தாபனமான CIA நடத்திய இந்த இரகசியப் போரிலேயே பயிற்சி பெற்றனர். அந்தப் போரனுபவத்தில் முதிர்ச்சி பெற்ற முகமது ஹசன் அகுன்ட் (Muhammad Hassan Akhund) என்ற ஒருவரே இன்று தலிபான் அரசாங்கத்தின் தலைவராக இருக்கிறார். இவர் பயங்கரவாதி என ஐ.நா. வால் பட்டியலிடப்பட்டவர். பாமியானில் இருந்த புத்தர் சிலைகளை குண்டுவைத்து தகர்ப்பதில் சூத்திரதாரியாக இருந்தவர்.


ஆனால், புரட்டாதி 11 தாக்குதல்களின் பின் ஒரு தசாப்தத்திற்குள்ளேயே அமெரிக்கா மீண்டும் ஜிஹாத் தீவிரவாதிகளை பயிற்றுவிக்கத் தொடங்கி விட்டது. சிரியா, லிபியா போன்ற நாடுகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களுக்கு வலுமிக்க ஆயுதங்களைக் கொடுத்தது. ஒரு பில்லியன் டாலர்கள் செலவழித்து சிரிய அதிபர் பஷார் அல்–அசாட் (Bashir al-Assad) இன் ஆட்சியை மாற்ற CIA நடத்திய இரகசியப் போரே ISIS வளர வழிவகுத்தது. தலிபானின் கட்டுப்பாட்டு மையத்துக்கு தனது நாட்டில் இடம் கொடுத்திருந்த பாகிஸ்தானுக்குக் கூட பண உதவி செய்தது.

மொத்தத்தில், அமெரிக்கா புரட்டாதி 11 தாக்குதல்களிலிருந்து கற்ற பாடங்களை மறந்தது பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போரை தடம் புரள வைத்து விட்டது. அதனை மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றி ஓடவைப்பது ஒரு மிகப் பெரிய சவால். ஆனால் அது மிகவும் அவசியமானது. இல்லாவிடின் தீவிரவாத ஜிஹாத் தான் இந்த நூற்றாண்டின் முக்கிய சாபக்கேடாக இருக்கும்.

**குறிப்பு: ப்ராமா செலானி புது டெல்லியில் உள்ள கொள்கைகள் ஆராய்ச்சி மையத்தின் மூலோபாயக் கற்கைகளுக்கான பேராசிரியர் ஆவார். அவர் பேர்லினில் உள்ள றோபேர்ட் பொஷ் கல்விக்கூடத்தின் (Robert Bosch Academy) ஆராய்ச்சியாளரும் ஆவார்.**

# பழங்குடிகளை ஆவணப்படுத்தலின் அவசியம்





நூலக நிறுவனம் கடந்த 24.07.2021 அன்று இணையவழி (ZOOM) ஊடாக பழங்குடிகளை ஆவணப்படுத்தல் எனும் தலைப்பில் கலந்துரையாடலை நடாத்தியிருந்தது. அதிலிருந்து பல முக்கிய விடயங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

உலகெங்கும் காணப்படும் பழங்குடிகள் தொடர்பில் இன்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இலங்கையிலும் காணப்படும் தமிழ் பேசும் பழங் குடிகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் நூலக நிறுவனம் இறங்கியுள்ளது. விளிம்பு நிலையில் உள்ள சமூகங்களை ஆவணப்படுத்தும் கருப்பொருளின் அடிப்படையில் தமிழ் தெரிந்த அல்லது தமிழரோடு கலந்துள்ள பழங்குடி சமூகங்களை ஆவணப்படுத்தும் முயற்சி முக்கியமானது.

மட்டக்களப்பில் நீண்டகாலம் பழங்குடி களோடு வாழ்ந்து அவர்கள் தொடர்பிலான வாழ் வியல் அனுபவங்களை அறிந்து, பல்வேறு ஆய்வு களை மேற்கொண்டவர் அதிபர் குமாரசாமி சண்முகம். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரக் கிராமமான களுவன்கேணியில் பிறந்து தற்போது வந்தாறுமூலையில் வசித்து வருகிறார்.

**அவர் தெரிவிக்கும் கருத்துகள் வருமாறு,**

கிழக்கிலங்கையில் பழங்காலம் தொட்டு வேடுவர் சமூகத்தினர் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தமிழர்களாக மாறிக் கொண்டி ருக்கிறார்கள். பெருமளவானவர்கள் மாறி விட்டார் கள். அந்த அனுபவங்களையும், கிழக்கு மாகாண வேடுவர் சமூகத்தின் வழக்காறுகள் தொடர்பிலும் கடந்த 42 ஆண்டுகளாக ஆராய்திருக்கிறேன். ஒரு சிறிய நூலையும் எழுதியுள்ளேன். அதன் தொடர்ச்சி யாக பல்வேறு ஆய்வுரைகள், கருத்தரங்குகளை இலங்கையின் பல பகுதிகளிலும் நடாத்தியுள்ளேன். கட்டுரைகளையும் எழுதியுள்ளேன்.

இப்பொழுது சிலர் வேடுவர் சமூகத்தின் வரலாறுகளை மாற்றி எழுதி வருகிறார்கள். அது பிற் காலத்தில் திரிபடைந்த வரலாறாக மாறி விடும் அபாயம் உண்டு. பூர்வ குடிகள் என்போர் யார்? வரலாற்றுக்கு எட்டாத காலம்தொட்டு இன்று வரையும் தங்களது தனித்துவங்களை அடையாளங்களை பாதுகாத்துக் கொண்டு நெருக்கடியான காலகட்டங் களிற் கூட ஒளித்தோ மறைத்தோ தங்களது பாரம் பரியங்களை கைவிடாமல் வாழ்ந்து வருகின்றார்கள். ஏனென்றால் காடுகள் அழிக்கப்பட்டாயிற்று. பாரம் பரிய தொழிலை செய்ய முடியாது, பாரம்பரிய ஆயுதங்களை தூக்க முடியாது, காட்டிலே வேட்டை யாட முடியாது, காட்டிலே தடி வெட்டி குடிசை அமைக்க முடியாது, அவர்களின் நிலங்களும் பறி போய்க் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மாற்று வழியைத் தேட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக கிழக்கு மாகாணத் தில் பல இடங்களில் வாழ்ந்து வந்த வேடுவர் குல மக்கள் தங்கள் மொழியையும் இழந்து அண்டி வாழ்கின்ற தமிழர்களாகவே அவர்கள் மாறி யுள்ளார்கள். அவர்களின் உணவு முறைகளில் கூட மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

**“இங்கே முக்கியமான இன்னொன்றை அவதானிக்கலாம். பெண்களுக்கு முதன்மையளிப்பது. ஆணையிடும் அதிகாரிகளாக பெண்கள் இருப்பார்கள். பெண்கள் சொல்வதனை ஆண்கள் நடைமுறைப்படுத்துவார்கள். வேடுவர் சமூகத்தில் பாலியல் வன்புணர்வு, பெண்கள் துஷ்பிரயோகம் போன்றவை நடப்பதில்லை”**

இந்த வேடுவர் சமூகத்தின் வரலாறுகளை நாங்கள் பின்னோக்கிப் பார்ப்போமாக இருந்தால் அவர்களிடம் இருக்கின்ற அந்த வழக்காறுகள், வாழ்வியல் கோலங்கள், வாழ்வியல் கூறுகள், உண்மையானதாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் இப்போதும் எங்கோ காட்டின் ஒரு மூலை யில் தங்கள் பாரம்பரிய வழிபாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தான் தங்களின் பாரம்பரிய வேடுவ மொழியை பேசுகிறார்கள். தங்களது பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்களை இவர்கள் தமக்கே உரித்தான முறை யில் வைத்திருக்கின்றார்கள்.

தலைமைத்துவத்துக்கு கட்டுப்படுகின்ற பண்பை வேடுவர் சமூகத்தில் மட்டும் தான் நான் கண்டிருக்கிறேன். அவர்களின் தலைமையின் கீழ் தான் அனைத்து பாரம்பரிய கலாச்சார நிகழ்வுகள் கூட இடம்பெறும். இங்கே முக்கியமான இன்னொன்றை அவதானிக்கலாம். பெண்களுக்கு முதன்மையளிப்பது. ஆணையிடும் அதிகாரிகளாக பெண்கள் இருப்பார் கள். பெண்கள் சொல்வதனை ஆண்கள் நடைமுறைப் படுத்துவார்கள். வேடுவர் சமூகத்தில் பாலியல் வன் புணர்வு, பெண்கள் துஷ்பிரயோகம் போன்றவை நடப்பதில்லை.

வேடுவர் என்றால் வளர்ந்த தாடி, நீண்ட தலை முடி, இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு, தோளில் கோடாலியைக் கொழுவிக் கொண்டு, வில்லும் அம்பும் எடுத்து திரிகின்றவர்கள் தான் என்கின்ற பொது மனப்பதிவு மக்கள் மத்தியில் உண்டு. கொத் துக் குழைகளை அணிவது வேட்டையாட மட்டும் தான். அதனை ஆடையாக அணிவதில்லை. கருவுற்ற மிருகங்களை கொல்லக் கூடாது, இளம்பெண் மிருகங்களை கொல்லக் கூடாது. இணையும் மிருகங்களை கொல்லக் கூடாது. பறவைகளின் முட்டைகளை எடுக்கக் கூடாது. இதனை மீறினால் அவர்கள் நீண்ட காலத்துக்கு காட்டில் வேட்டையாட தடை விதிக்கப்படுவார்கள்.

வேடுவ சமூகத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமாக இருந்தால் நீங்கள் முதலில் அவர்களின் இருப்பிடம் நோக்கிப் போக வேண்டும். நாங்களும் அவர்களாக மாற வேண்டும். அப்படியே நீண்ட காலம் வாழ வேண்டும். அப்போது தான் அவர்களின் உண்மையான வாழ்வியலை அறிந்து கொள்ளலாம். அவர்கள் பல விடயங்களை சொல்ல மாட்டார் கள். அவர்களிடம் இருந்து நாங்கள் பலவற்றை கற்றிருக்கிறோம். இன்னும் பலவற்றை கற்க வேண்டியுள்ளது. அவர்களது திருமணம் தொடக்கம் மரணம் வரை சடங்குகள் வித்தியாசமானது.

**பழங்குடிகளின் சுவடிகளையும், சுவடு களையும் தொடர்தல் எனும் தலைப்பில் பேராசிரி யரும், கவிஞருமான உருத்திரமூர்த்தி சேரன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.**

காலனித்துவம் ஏகாதிபத்தியம் அதற்கு பிற் பாடு வந்த அதிகார சக்திகளும் ஏற்படுத்தியது பழங் குடி மக்களின் அறிவினுடைய அழிவு. வரலாற்றினு டைய அழிவு. இந்த மக்களுடைய வரலாறு, வாழ்க்கை, ஆவணங்கள், கருத்துகள், சிந்தனைகள், இயற்கை தொடர்பில் அவர்கள் திரட்டி வைத்திருந்த அறிவு எல்லாவற்றையும் அப்படியே அழித்துக் கொண்ட வரலாறு தான் இந்த சமூகத்துக்கு உள்ளது. இந்தப் பண்பாட்டு அழிப்பும் இனப்படுகொலைக்குள் சேர்க்க வேண்டிய ஒன்று தான்.

எந்தப் பழங்குடி மக்களைப் பற்றி நாங்கள் பேசுகின்ற போதும் அவர்களுடைய வரலாற்றை சுவடிகளை சுவடுகளை தொடர்வதனைப் பற்றி

நாங்கள் பேசுகின்ற போது எங்களுடைய மனதிலும் சிந்தனையிலும் நாங்கள் முதலாவதாக வைத்திருக்க வேண்டிய ஒன்று உள்ளது. அவர்களின் அறிவு அழிப்பு, வரலாற்று அழிப்பு, இனவழிப்பு என்பது உலகின் எல்லா இடங்களிலும் நடந்திருக்கிறது. ஒரு இடத்திலும் வித்தியாசம் கிடையாது.

அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள் பற்றி பல்வேறு ஆய்வுகளையும் செய்த எழுத்தாளர் Linda Tuhiwai Smith அவர்கள் Decolonizing Meth-odologies என்ற அற்புதமான நூலை எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் சமூக விஞ்ஞானத்திலும் வரலாற்றிலும் நாங்கள் எழுதுகின்ற முறையியலை அதற்குள் இருக்கின்ற காலனித்துவ சிந்தனையை காலனித்துவ பிடிப்பின் இறுக்கத்தை சுட்டிக் காட்டுகிறார். அவற்றை எப்படிக் களைவது என்பது பற்றி எழுதியிருக்கிறார்.

கடந்த 20 ஆண்டுகளில் தான் பழங்குடி மக்களில் இருந்து பல வரலாற்று ஆய்வாளர்களும், சிந்தனையாளர்களும் உருவாகி இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுளாகத் தான் அவர்கள் பற்றிய கவனமே பல்வேறு நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் உருவாகி இருக்கிறது. அதற்கு காரணம் பழங்குடி மக்களின் எதிர்ப்பு. அது அறிவியல் தளம், ஆய்வியல் தளம், பல்கலைக்கழக தளம் போன்ற பல்வேறு தளங்களில் இருந்து வருகிறது. குறித்த எழுத்தாளர் தனது நூலின் முன்னுரையில் ஒரு வசனத்தை சொல்கிறார். ஆய்வு, ஆவணம் என்ற இரண்டு சொற்களையும் போல மிக அசிங்கமான சொற்களை பழங்குடி மக்கள் காணவில்லை என்று சொல்கிறார். அதற்கு காரணம் என்னவெனில், கடந்த பல நூற்றாண்டுகளாக ஆய்வு, ஆவணம் என்ற பெயரில் அவர்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டிருக்கிறது. வரலாறு அழிக்கப்பட்டுள்ளது. இருப்பு அழிக்கப்பட்டுள்ளது.

பழங்குடி மக்களிடம் நாங்கள் சென்று வெளியாளாக ஆய்வு செய்யச் செல்லும் போது, ஆவணப்படுத்த செல்லும் போது எங்களுக்கு வருகின்ற சிக்கல் என்ன? எங்களது முறையியலை (methodology) எப்படி ஒழுங்கு படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

1987 இலிருந்து 1989 இறுதி வரைக்கும் நெதர்லாந்தில் படித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் படித்த பல்கலையில் மிகப்பெரிய ஆவணக்காப்பக நூலகம் உள்ளது. அங்கே இலங்கையில் டச்சுக்காரர் குறித்த பல்வேறு ஆவணங்களும் இருந்தன. ஆவணக் காப்பகங்களும், ஆவணங்களும் பழங்குடிகளை பொறுத்த வரையிலும் எங்களை பொறுத்தவரையிலும் சில புதிய விடயங்களை செய்யத் தூண்டலாம். தாக்கமான காரசாரமான விவாதங்களை எழுப்புவதற்கு எம்மைத் தூண்டலாம். அதேவேளை அவை கோபத்தையும் ஏற்படுத்தலாம். ஆறாத மனக்காயங்களை இந்த ஆவணக் காப்பகங்கள் ஏற்படுத்தலாம்.

பழங்குடி மக்களின் ஆவணங்களை தேடிப் போதல் என்பது வேருக்கு போவது தான். வேர், வேரின் தொடர்ச்சி, வேர் எப்படி பரந்து விரிந்திருக்கிறது என்று பார்ப்பது தான் முறை. ஆவணம் என்பது உண்மையில் தமிழ்ச் சொல் அல்ல. அது சமஸ்கிருத சொல். காசு கொடுத்து வாங்குவதற்கான ஒரு சான்றாக தான் அது இருந்தது. அடிமைகளை விற்று விட்டு அதற்கு சான்றாக எடுப்பது தான் இந்த ஆவணம். இதற்கு பொருத்தமான தமிழ்ச் சொல் சுவடி. ஒரு காலத்தில் ஆவணம் என்பது ஓலையிலோ அல்லது கடதாசியிலோ எழுதப்பட்டதனை தான் குறிக்கும். இப்பொழுது ஆவணம் என்பது பல விடயங்களை உள்ளடக்கியதாக மாறி விட்டது.

**“பழங்குடி மக்களின் ஆவணங்களை தேடிப் போதல் என்பது வேருக்கு போவது தான். வேர், வேரின் தொடர்ச்சி, வேர் எப்படி பரந்து விரிந்திருக்கிறது என்று பார்ப்பது தான் முறை”**

பழங்குடி மக்கள் தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரை காலனித்துவ நீக்கம் என்பதனை எங்களது முதன்மையான பணியாக எடுக்க வேண்டும். மூன்றாம் உலக நாடுகளினது ஆவணங்களும், ஆவணக் காப்பகங்களும் காலனித்துவத்தால் கட்டியெழுப்பப்பட்டு காலனித்துவப் பார்வையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இவற்றை காலனித்துவ நீக்கம் செய்ய வேண்டிய அடிப்படையான தேவை எங்களுக்கு இருக்கிறது.

அடுத்து அறிவுத் தேட்டம் – பழங்குடி சமூகங்கள் உருவாக்கி வைத்திருக்கின்ற அறிவு அதனுடைய தேட்டம் அதன் திரட்சி எல்லாம் எங்கே? அவற்றை தேடிக் கண்டுபிடித்து மேலைத்தேயத்துக்கு நிகராகக் கொண்டு வர வேண்டும். எல்லா வகையான ஆய்வுகளிலும் இந்த மக்களின் குரல் இருக்கிறதா, எங்கே இருக்கிறது என்பதையும் நாங்கள் தேடிப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய அகத்திலேயே 500 க்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய காலனித்துவம் ஊறியிருக்கிறது. கல்வி முறையில், சிந்தனை முறையில், எழுத்து முறையில், வாசிப்பு முறையில் காலனித்துவம் இருக்கிறது. எதனை நாங்கள் முக்கிய ஆவணம், சான்று என்று எடுக்கும் முறைகளிலேயே காலனித்துவம் இருக்கிறது. எங்களது பல்கலைக்கழகங்களிலேயே எல்லாம் எழுத்தில் இருக்க வேண்டும் என்பார்கள். வாய்மொழி மூலம் சரிவராது என்பார்கள். ஆனால் பழங்குடி மக்களுக்கு வாய்மொழி மூல வரலாறு மிகவும் முக்கியமானது. பல ஆண்டுகளுக்கு முன்பு கனேடிய உயர்நீதிமன்றம் பழங்குடிகள் தொடர்பில் தீர்ப்பொன்றை வழங்கி இருந்தது. வரலாற்றை மாற்றிப் போட்ட தீர்ப்பு அது. அவர்களின் வாய்மொழி மூலமான வரலாற்றை நீதிமன்றங்களில் சாட்சியாக கொள்ள முடியும் என்ற தீர்ப்பு.

பழங்குடி மக்கள் தங்களின் வரலாற்றை வாய்மொழி மூலம் வைத்திருப்பது மட்டுமல்ல. ஓவியம் மூலமாக தலைமுறை தலைமுறையாக வரைந்து வைத்திருக்கிறார்கள். இது 5000 வருடங்கள் வரை நீண்டுள்ளது. பழங்குடி மக்களின் அறிவுத் திரட்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

பதி எழு அறியாப் பழங்குடி என சிலப்பதிகாரத்தில் வருகிறது. அதாவது, தன்னுடைய பூர்வீக இடத்தை விட்டு அகலாதவன் தான் பழங்குடி. ஆனால் இப்போது சொந்த நிலத்தை விட்டு கட்டாயமாக பெயர்க்கப்படுகின்றார்கள். நிலத்தோடு அவர்களுக்கான பிணைப்பு என்பது மிகவும் இறுக்கமானது. அது அதிகாரங்களால் உடைக்கப்படுகிறது.

கனடிய தமிழ் காங்கிரசினர் கனேடிய பழங்குடி சமூகம் ஒன்றுடன் இணைந்து சில நாட்கள் தங்கியிருந்து எங்களது தொன்மை, பண்பாடு, கலாச்சாரங்களை அவர்களுக்கு விளக்கி பின் அவர்களின் தொன்மை பற்றிய பல விடயங்களை அறிந்திருக்கிறார்கள். அதில் ஏராளமான அனுபவங்கள் எங்களுக்கு கிடைத்தன.

வடஅமெரிக்காவில் உள்ள பழங்குடி மக்களையும் தமிழ் மக்களையும் உணர்வுபூர்வமாக இணைப்பது என்னவென்றால் அது இனப்படுகொலை ஆகும். அதைப்பற்றி நாங்கள் பேசுகின்ற போது மிகத் தீவிரமான ஒரு தோழமை உணர்வு எங்களுக்கும் அந்தப் பழங்குடி மக்களுக்கும் இடையே வருகிறது.

பழங்குடி மக்களுடனான ஆய்வுகளின் போது நடைமுறை ரீதியாக நாங்கள் என்ன செய்யலாம் என சொல்கிறேன். முதலாவது, நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு ஆய்வு முயற்சியும் பழங்குடி மக்களுக்கு பயன்தர வேண்டும்.

இரண்டாவது, அவர்கள் சேர்த்து வைத்திருக்கின்ற அறிவுத்திரட்சியை உரிய முறையில் சேகரிக்கலாம் பரவலாக்கலாம். ஆனால் அதற்கான உரிமை அவர்களுக்குத் தான் இருக்கிறது. ஆனால் உலகில் பல்வேறு அறிவுத்திரட்சிக்கான உரிமை அமெரிக்காவுக்குத் தான் செல்கிறது. வேப்பமரத்துக்கும், பட்டிப்பூவுக்கும் கூட எங்களுக்கு உரிமையில்லை. அதன் அறிவியல் உரிமையாளர்கள் தாங்கள் என அமெரிக்கா சொல்கிறது.

மூன்றாவது நாங்கள் இப்படிச் செய்கின்ற போது எங்களுக்கு இருக்கின்ற அறம் என்ன? எங்களுடைய விழுமியங்கள் என்ன என யோசிக்க வேண்டும். காலனித்துவமும், ஏகாதிபத்தியமும் செய்த மாதிரி அறிவு வன்முறைகளில் நாம் ஈடுபடக் கூடாது.

**படங்கள் – பி. சக்திவேல்**

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயமும், தமிழ் அரசியல் தரப்பின் இயலாமையும்

-கேதீஸ் புவிநேசராசா-




இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மக்கள் அரச நிருவாக சேவையை வினைத்திறனாக பெற்றுக்கொள்வது கடந்த முப்பது வருடங்களாக தடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான காணி, நிதி அதிகாரங்கள் வழங்கப்படுவதன் நியாயத்தை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டு வழங்குவதற்கு தயாராகின்ற போதெல்லாம் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் அதிகாரங்களை பயன்படுத்தி தடுத்து வரும் நிலைமை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இது தமிழ் அரசியல் தரப்பின் இயலாமையா? கவனயீனமா? அல்லது ஏதாவது மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் இவர்கள் இயங்குகின்றார்களா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது. மக்கள் அரச சேவையை சிறந்த முறையில் பெறும் வகையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை வழங்குவதற்கு பதிலாக அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களையும் பிடுங்கும் சூழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

எந்த அரசு வந்தாலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் நியாயத்துக்கு மாறாக தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் முட்டுக்கட்டை போடுகின்றார்கள். ஆனால் ஏன் தமிழ்த் தலைவர்கள் கட்சி பேதங்களை மறந்து இதற்கு தீர்வை பெற முடியாதுள்ளது?

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாக மாற்றுமாறு ஒரு அறிவித்தல் அண்மையில் வந்திருந்தது. இந்த பின்தள்ளும் தீர்மானத்துக்கு பின்னால், முஸ்லிம் அரசியல்வாதிகளின் தொடர் சதி முயற்சி இருந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, அமைச்சர் சமல் ராஜபக்சவை தமிழ் அரசியல் தரப்புக்கள் சந்தித்து விளக்கியபோது, அந்த அறிவித்தல் நிறுத்தப்படுவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்டு காணப்படும் அரச காணிகள் மற்றும் சிறு குளங்கள் இஸ்லாமிய தனி நபர்களால் அத்துமீறி மண் நிரப்பப்படுவதும், போலியான ஆவணங்கள் தயாரித்து உரிமைகோரும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில், கல்முனை–01 சி கிராம சேவகர் பிரிவில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றபோது, இதனை தடுக்க நடவடிக்கை எடுத்த கிராம சேவை உத்தியோகத்தர் அச்சுறுத்தப்பட்டிருந்தார். அதனையடுத்து காவலர் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில், காணிப்பிரிவால் கலந்துரையாடலொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால், அதனை நிறுத்துமாறு அறிவித்தல் வந்துள்ளமை பல கேள்விகளை உருவாக்குகின்றது.

காணி அதிகாரங்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு வழங்கப்படாமல் தடுக்கப்படுவதற்கும் இவ்வாறான காணி அபகரிப்புக்கள் இடம்பெறுவதற்கும் தொடர்புகள் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை வழங்ககோரி கடந்த முப்பது வருடங்களாக ஜனநாயக ரீதியில் போராடி வரும் இம்மக்களின் கோரிக்கையானது இதுவரை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில், அதிகாரங்கள் பறிக்கப்படுவது வேதனையளிக்கிறது.

இரண்டு அரசாங்கங்களிலும் ஆளும் தரப்பிலும் எதிர்த் தரப்பிலும் தமிழ் அரசியல்வாதிகள் இருந்தனர். ஆனால், கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்பட வில்லை. ஆனாலும், முஸ்லிம் தரப்பு, இருக்கும் அதிகாரங்களையும் பறிக்க முயல்கின்றது. இதற்கு தமிழ் அரசியல் தரப்பிடம் என்ன பதில் உள்ளது?

கடந்த கால யுத்த சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திய முஸ்லிம் அரசியல்வாதிகள், கல்முனையில் தமிழரின் இருப்பை சிதைத்துள்ளனர். அதற்கு பல உதாரணங்கள் வெளிப்படையாகவே உள்ளன.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் – கல்முனை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டி முனை, சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை, துரைவந்தியமேடு ஆகிய ஏழு கிராமங்கள் உள்ளன. இதில், 29 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய தாக பௌதிக வளம், ஆளணிகளுடன் நிரந்தரமான கட்டிடத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இயங்கிவருகின்றது. ஆனால், நிதி மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படாமலும் அதற்கான அதிகாரிகள் (வர்த்தமானி அறிவித்தலின் மூலம்) நியமிக்கப்படாமலும் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அதிகாரங்கள் வழங்கப்படுவதால் இங்கு வாழும் முஸ்லிம்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஆனால், முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பு இருப்பதாக ஒரு பொய்யான விம்பத்தை உருவாக்கி சிலர் அரசியல் செய்து வருகின்றனர்.

கல்முனை மாநகருக்குட்பட்ட குடியிருப்புக்கள் முழுமையாக தமிழ் குடும்பங்களையும் சொற்பளவு சிங்கள குடும்பங்களையும் உள்ளடக்கி யிருந்தன. தமிழருக்கு சொந்தமான காணியில் அரச கட்டிடங்கள் கட்டப்பட்டதுடன், கல்முனை நகரில் அமைந்திருந்த கிறவல் குழி என அடையாளப்படுத் தப்பட்ட அரச காணியில், இலங்கையின் நடைமுறைக்கு அப்பால் பாகிஸ்தான் தலைநகரின் பெயரான இஸ்லாமபாத் என அழைக்கப்படும் தனி முஸ்லிம் குடியிருப்பு உருவாக்கப்பட்டது.

**“முஸ்லிம் தரப்பு, இருக்கும் அதிகாரங்களையும் பறிக்க முயல்கின்றது. இதற்கு தமிழ் அரசியல் தரப்பிடம் என்ன பதில் உள்ளது?”**

சுனாமியின் பின்னர் அங்கு கட்டப்பட்ட தொடர்மாடி குடியிருப்பும் தனியாக முஸ்லிம்களுக்கே வழங்கப்பட்டன. இவ்வாறாக பல அநியாயங்கள் கல்முனை தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன.

கடந்த நல்லாட்சியில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் பங்குதாரராக இருந்தும் இதற்கு தீர்வு எட்டப்படவில்லை. இதனால் அதிருப்தி யடைந்த அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்தனர். மாறாக, பிரதமர் மஹிந்த தரப்புடன் உறவைப்பேணிய நிலையில், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு சுமார் முப்பதாயிரம் வாக்குகளை வாரி வழங்கினர்.

ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தற்போதைய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அதிகாரங்களை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்கள். ஆனால், அதுவும் இதுவரை நடந்தபாடில்லை.

1993 ஆம் ஆண்டு அமைச்சரவை 29 உப பிரதேசங்களை தரமுயர்த்த அங்கீகாரம் வழங்கி இருந்தது. ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தவிர, ஏனைய 28 உப பிரதேச செயலகங்களுக்கு மாத்திரம் காணி நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிருவாகப்பிழைக்கு பொறுப்பு வாய்ந்த மாவட்ட செயலக அதிகாரிகளும் தொடர்ச்சியாக உடந்தையாக இருந்து வருகின்றார்களா?

# கல்வியில் பெருந்தொற்றின் தாக்கம்



தருசி வீரசிங்க, 'சண்டே டைம்ஸ்'
(Tharushi Weerasinghe, Sunday Times, September 5. 2021)

பெருந்தொற்று தாக்கிய நாளில் இருந்து இலங்கை மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கல்வி வாய்ப்பை இழந்துவிட்டனர்.

கல்வி மன்றம் நடத்திய ஆராய்ச்சியின் படி,45 சதவீத மாணவர்களுக்கு மட்டுமே இணையவழிக் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. மிகுதி 55 சதவீத மாணவர்னளும் கைவிடப்பட்ட நிலை தான் ஏற்பட்டுள் ளது. நவம்பர் 2020 இல் நடத்தப்பட்ட கணக் கெடுப்பின்படி, ஆசிரியர்கள் தங்கள் மாணவர் களில் சராசரியாக 5 சதவிகிதத்தினருக்கு மட்டுமே சூம் (zoom) போன்ற மென்பொருளைப் பயன் படுத்தி நிகழ்நேர வகுப்பறை அனுபவத்தை வழங்க முடிந்தது. மேலும் 40 சதவிகித மாணவர்களுடன் சமூக ஊடகங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளப்பட்டது.

"பெரும்பாலான பாடங்கள் வெறுமனே வாட்ஸ்அப் மூலம் பகிரப்பட்ட செய்திகள், வீட்டுப் பாடப் பணிகள் மற்றும் PDF ஆவணங்கள் மட்டுமே" என்று கொள்கை ஆராய்ச்சியாளரும் கல்வி மன்றத் தின் ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி சுஜாதா கமகே கூறினார்.

வகுப்பறைகளை வெறுமனே சூமிற்கு மாற்று வது மட்டும் சாத்தியமான தீர்வாக இருக்க முடியாது என்பதை கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

பணக்கார நடுத்தர வர்க்கத்தை இலக்காகக் கொண்ட கொள்கைகள் எப்போதுமே கவனிப்பாரற்ற ஏழைச் சமூகங்களுக்கு உதவாது. இணையவழிக் கல்வி தொடங்குவதற்கு முன்பே அதன் தோல்வி நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று நிபுணர்கள் வாதிடு கின்றனர்.

LIRNEasia (Learning Initiatives on Reforms for Network Economies Asia) நிறுவனம் 2020 இல் நடத்திய கணக்கெடுப்பில் மாணவர்களைக் கொண்ட குடும்பங்களில் 48 சதவீதமானவர்களுக்கு மட்டுமே திறன்பேசி (smartphone) அல்லது கணினி வசதி இருக்கின்றது என்று தெரிய வந்துள்ளது.

மேலும், மூன்றில் ஒரு பங்கு அல்லது 34 சதவிகிதமான வீடுகளுக்கு மட்டுமே வலையிணைப்பு உள்ளது. ஏழை, கிராமப்புறக் குடும்பங்களைக் கருத்தில் எடுத்தால் இவ்விகிதம் இதை விட மோசமாக உள்ளது. ஏனெனில் சமூகப் பொருளாதாரத்தில் அடி மட்டத்தில் இருக்கும் குடும்பங்களிடையே இந்த எண்ணிக்கை 21 சதவிகிதமாகக் குறைகிறது.

கடந்த ஆண்டு இலங்கையில் இரண்டாவது தடவையாக தொற்றுநோய் பூட்டுதல் ஏற்பட்ட போது கம்பஹாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு சம்பந்தப் பட்ட பலரை நேர்காணல் செய்தது. ஆடி 2021 இந்த ஆய்வின் அறிக்கை வெளியானது.

அதை எழுதியவர்களில் ஒருவரான LIRNEasia இன் ஆராய்ச்சி மேலாளர் காயானி ஹருல்லே (Gayani Hurulle), சாதனங்களின் பற்றாக்குறை மற்றும் வலையிணைப்புச் சிக்கல்கள் மாபெரும் ஆபத்தின் ஒரு சிறுகுறியீடு மட்டுமே (tip of the iceberg) எனக் குறிப்பிட்டார்.

ஒரு வீட்டில் ஒரு சாதனம் இருந்தபோதும் கூட அதைப் பயன்படுத்துவதற்கு வீட்டில் இருந்து வேலை செய்யும் பெற்றோர்களுக்கும் இணைய வகுப்பில் கலந்து கொள்ள வேண்டிய பிள்ளை களுக்கும் இடையே போட்டி இருந்தது. பெற்றோர்கள் வேலைக்கு சென்ற போது, சில மாணவர்கள் எந்த சாதனமும் இன்றி விடப்பட்டார்கள். அவர்களால் நிகழ்நேரத்தில் வகுப்புகளைப் பின்பற்ற இயலாமல் இருந்தது.

"நாங்கள் பிள்ளைகளுக்கு வகுப்புக்களை அதிகாலை 4 மணியளவில் தொடங்குவோம், மேலும் இரவு 8 மணிக்குப் பிறகு கற்பிப்போம். இவ்வாறான

ஒரு அமைப்பை வகுத்ததன் மூலம் அவர்கள் பாடத்தைப் பின்பற்ற முடிந்தது" என்று ஓர் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர் கூறினார்.

பிள்ளைகளுடன் தொடர்பு கொள்வதற்குரிய வகையில் போதிய தொடர்பு விபரங்கள் இல்லாததால், ஆசிரியர்கள் தங்கள் தொடர்பு முறைகளை உருவாக்குவது கடினமாக இருந்தது. "தொடர்பு எண்களைப் பெறவும் வரிசைப்படுத்தவும் எங்களுக்கு சுமார் 2 வாரங்கள் ஆனது. இறுதியில் நாங்கள் மாணவர்களிடம் உதவி கேட்க வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் நண்பர்களின் இலக்கங்களை நண்பர்களிடமிருந்து பெற்றுத் தருவார்கள்".

"இணையவெளியில் இணைந்து கொள்வதே ஒரு சவாலாக இருக்கிறது. அந்தச் சவாலை மீறி இணைந்து கொண்டாலும் மேலும் பல பிரச்சனைகள் நுழைந்து விடுகின்றன" என்று திருமதி ஹருல்லே குறிப்பிட்டார். அவர்களின் ஆய்வின் படி புதிய தொழில்நுட்பத்தை பழகிக் கொள்வது மூத்த ஆசிரியர்களுக்கு கடினமாக இருந்தது. மற்றும் சில வீடுகளில், தாத்தா பாட்டி அல்லது பணிப் பெண்கள் பிள்ளைகளுக்கு உதவ வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு உதவி செய்வது எப்படி என்று தெரியவில்லை.

இணையவெளியில் உள்ள ஆபத்துகள் பற்றிப் புரிந்துகொண்ட பெற்றோர்களுக்கு இணையவெளியில் அவர்களின் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றொரு கவலையாக இருந்தது. இதனால், சாதனங்களில் பெற்றோர் இட்டிருந்த பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் சில நேரங்களில் மாணவர்கள் தங்கள் கற்றலுக்குத் தேவையான தளங்களைப் பார்க்க முடியாமற் தடுக்கின்றன. இதுவும் ஒரு தடைக்கல்லாக இருக்கிறது.

தற்போதைய வழக்கத்தில் இருக்கும் கரும் பலகைகளையும் சுண்ணாம்புக்கட்டிகளையும் கொண்டு தேர்வுகளை நோக்கி கற்பிக்கும் முறையும் பல மாணவர்களுக்கு சூம் (zoom) மீது களைப்பேற்பட வைத்தது. இந்த வகுப்புகள் தொடரத் தொடர மேலும் தனிமைப்படுத்தப்பட்டதால் பிள்ளைகளின் சமூக–உள வளர்ச்சி சரிவடைந்தது. இதுவும் அதிக பிள்ளைகள் பின்தங்க வழிவகுத்தது. குறுகிய இடைவெளியில் பள்ளிகள் மீண்டும் திறந்தாலும், ஏழை சமூகங்களின் பெற்றோர்கள் மேலும் பல தடைகளை எதிர்கொண்டனர்.

**"எமது கற்றல் முறை ஏற்கனவே வெற்றிகரமான ஒன்றாக இல்லை. அதன் பொருத்தமற்ற தன்மையை இணையவழிக் கல்வி மேலும் வெளிப்படையாக்கியுள்ளது"**

"பள்ளிகள் தொடங்கியபோதும் கூட என்னால் என் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை" என்று கேகாலையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளுக்கு தாயான உழைக்கும் பெண் ஒருவர் கூறினார். மாணவர்களுக்கு தினசரி தேவையான முகமூடிகளைக் கொள்முதல் செய்யவோ அடிக்கடி காலியாகிய தொற்றுநீக்கித் திராவக புட்டிகளை வாங்கவோ அவரால் முடியவில்லை.

"கல்வி வாய்ப்புக்களை ஏற்கனவே சமமற்றதாக இருந்தது: தொற்றுநோய் அதை இன்னும் அதிகரிக்கச் செய்தது" என்று ஒரு சமூக சேவகர் சண்டே டைம்ஸ் பத்திரிகையிடம் கூறினார்.

இது எப்படியிருந்தாலும், அதிகரித்த ஊதியத்திற்காக ஆசிரியர்கள் மேற்கொண்டுள்ள கோரிக்கைகளின் காரணமாக இணையவழி வகுப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

"தரம் 1–9 வகுப்புக்களில் பாடத்திட்டத்தை படிப்பித்து முடிப்பதில் மட்டும் அக்கறை இருக்கக் கூடாது" என்று கலாநிதி சுஜாதா கமகே வலியுறுத்தினார். மே 2020 இல் பூட்டானில் செய்தது போல 'அவசர பாடத்திட்டம்' அல்லது 'சுருக்கப்பட்ட பாடத்திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சியாகக் கற்றுக்கொள்ளப்படும் கணிதம் மற்றும் மொழி போன்ற பாடங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் மற்றைய பாடங்களை மாணவர்களுக்கு பொதுவான கருப்பொருளாக மட்டுமே கற்பிக்கவேண்டும் என்றும் அவர் நம்புகிறார்.

"பின்லாந்து போன்ற மேம்பட்ட நாடுகள் வரலாறு மற்றும் புவியியல் போன்ற பாடங்களை நிகழ்வு அடிப்படையிலான கற்றல் முறை மூலம் கற்பித்து வருகிறார்கள். எமது கற்றல் முறை ஏற்கனவே வெற்றிகரமான ஒன்றாக இல்லை. அதன் பொருத்தமற்ற தன்மையை இணையவழிக் கல்வி மேலும் வெளிப்படையாக்கியுள்ளது" என்று அவர் கூறினார்.

# உடற்பருமன் வியாதியை உலகெங்கும் பரப்பும் அமெரிக்கா

ஹசன் மினாஜ் (Netflix)
தமிழாக்கம் – நிமிர்வு

**'அமெரிக்கர்கள் அதிக உணவு அருந்துவார்கள்.'**

**'அங்கு ஒருவருக்கு பரிமாறப்படும் உணவின் அளவு மிகவும் பெரியது.'**

**'அமெரிக்கர்கள் உடல்பருமன் கூடியவர்கள்.'**

இவை அமெரிக்கர்களின் உணவுப் பழக்கம் பற்றி பிற நாடுகளிலிருக்கும் பெரும்பாலான பொது மக்களின் அபிப்பிராயம். உண்மையிலேயே 20 வயதுக்கும் கூடிய அமெரிக்க மக்களில் 32% ஆனவர்கள் உடல் எடை கூடியவர்களாக காணப் படுகின்றனர். 40% ஆனவர்கள் உடற்பருமன் (obesity) உள்ளவர்களாக உள்ளனர்.

உடற்பருமன் கூடியவர்களை பக்கவாதம் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் 64% அதிகமாகும். இதயநோய் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் 50% அதிகம். நீரிழிவு நோய் தாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் 20 மடங்கு அதிகம்.

உடற்பருமன் வியாதி அமெரிக்கர்களின் பிரச்சனையாகவே ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இன்று அப்படியல்ல. இவ்வியாதி உலகெங்கும் அதிகரித்துச் செல்கிறது. பிரேசிலில் ஒவ்வொரு வருடமும் ஒரு மில்லியன் மக்கள் இதனாற் பாதிக்கப் படுகிறார்கள். 2025 ஆண்டளவில் சீனாவில் ஏறத்தாள 50 மில்லியன் சிறார்கள் பாதிக்கப்படு வார்கள் என்று கூறப்படுகிறது. சீன தொலைக்காட்சி கார்த்திகை 24, 2016 ஆண்டு ஒளிபரப்பிய செய்தி யில் இது தெரிவிக்கப்பட்டது. இந்தியாவிலும் பொருளாதார வளர்ச்சி பெருகப் பெருக மக்களில் பலர் அதிக உணவு உண்பதற்கும் குறைந்தளவில் உடல்ரீதியான வேலைகள் செய்வதற்கும் தூண்டப் படுகிறார்கள்.

உடற்பருமன் வியாதி ஒரு உலகளாவிய நோயாக வந்துள்ளது. 1970களில் இருந்ததைவிட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய



காரணங்களில் ஒன்று இன்று எல்லோரும் அமெரிக்கர்கள் மாதிரி உண்ணத் தொடங்கி விட்டார் கள். அதிக சீனி, அதிக கொழுப்பு, அதிக மாமிசம் என்று உண்ணப் பழகி விட்டார்கள்.

நாங்கள் எதிர்பார்க்காத இடங்களிற்கூட இதனை அவதானிக்கலாம். பாலஸ்தீனத்தின் காசா (Gaza) வில் மின்சாரம் இல்லை, மருந்து வகைகள் இல்லை, சுதந்திரம் இல்லை, ஆனால், பொரித்த கோழி கிடைக்கிறது! அப்பகுதிக்கு பொரித்த கோழி நிலக்கீழ் சுரங்கப்பாதைகள் வழியாக கடத்தப்படு கிறது. பொருளாதாரத் தடைகளையும் தாண்டி அங்கு இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருள் ஒன்று உள்ளதென்றால் அது பொரித்த கோழியே.

உலகளாவிய உடற்பருமன் வியாதி சாதாரணமாக உருவானதல்ல. பெருநிறுவனங் களின் பணத்தாசைக்கு துணைபோகும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக உலகின் ஒவ்வொரு மூலைக்கும் அமெரிக்க உணவுப் பழக்கம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு வகையில் பார்த் தால் இது ஆச்சரியப்பட வைக்கிறது. மனித குலம் பட்டி னிக்கு எதிராகவே அதன் வரலாற்றில் பெரும்பாலும்

போராடிவந்துள்ளது. ஆனால் இன்று, வரலாற்றிலேயே முதன் முதலாக பெரும்பாலான மக்கள் அளவுக்கதிக மான உணவு உட்கொள்பவர்களாக ஆகியுள்ளனர் (The Nation, October 1, 2019).

மக்கள் அதிக கலோரிகளை உட்கொள்கிறார்கள் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் தேவையான சத்துக்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பதப்படுத்தப்பட்ட உணவு (processed food) எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிப் போட்டுள்ளது. அமெரிக்க உணவுற்பத்தி நிறுவனங்கள் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை மாற்றியமைக்கின்றன. உணவின் மீது போதையேற்படப் பண்ணுகின்றன. அவர்கள் எங்களை பழரசங்களைக் கூட பைகளில் இருந்து அருந்த தந்திரமாகப் பழக்கி விட்டனர். அமெரிக்கப் பாடசாலைகளில் குளிர்பானங்கள் (soda) விற்க தடை உள்ளது, ஆனால், சீனியை அதிகம் கொண்ட பழரசங்களை விற்பதற்கு தடை இல்லை!

உணவுற்பத்தி நிறுவனங்கள் செய்யும் மிக மோசமான செயல் போலித்தகவல்களைப் பரப்புவதாகும். அனேகமாக எல்லா உணவுற்பத்தி நிறுவனங்களும் இந்தத் துறையில் குற்றவாளிகளே. குறிப்பாக ஒரு நிறுவனம் இந்தத் துறையில் மிகவும் மோசமான குற்றவாளி. அது கொக்கோ கோலா (Coco Cola).

குளிர்பானங்கள் எந்தளவுக்கு உடல்நலத்திற்கு தீங்கானவை என்ற ஆராய்ச்சி முடிவுகளை 1990 களின் கடைசிப் பகுதியில் பல விஞ்ஞானிகள் வெளியிடத் தொடங்கினார்கள். கொக்கோ கோலா நிறுவனம் அவற்றை நிராகரித்தது. தனக்குச் சாதகமாக செயற்படக்கூடிய விஞ்ஞானிகளுக்கு பணத்தை கொடுத்து அந்த ஆராய்ச்சிகளை மறுதலித்தது. அது ஏறத்தாழ 400 ஆராய்ச்சிகளுக்கு பணம் கொடுத்தது. அவற்றுள் பெரும்பான்மையானவை உணவுப்பழக்கத்துக்கும் உடற்பருமனுக்கும் இடையே இருக்கும் தொடர்பை கண்டுகொள்ளவே இல்லை. இதனூடாக கொக்கோ கோலா நிறுவனம் தனக்கென்று ஓர் ஆராய்ச்சித் துறையையே நிறுவ முயற்சித்தது. அமெரிக்கர்கள் தமது உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்துவதை விடுத்து தமது உணவுப் பழக்கத்தில் தேவைக்கு அதிகமாக கவனத்தைச் செலுத்துகிறார்கள் என்ற கருத்தை இந்த ஆராய்ச்சித் துறையினூடாகப் பரப்புவதற்கு மில்லியன் கணக்கில் டொலர்களை அவர்கள் செலவு செய்தார்கள்.

இது பலராலும் கண்டிக்கப்பட்டது. கடைசியில், மக்களின் கோபத்தைக் குறைக்க, கொக்கோ கோலா நிறுவனத்தின் தலைவர் இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதாக அறிவிக்க வேண்டிய நிலை வந்தது. அதாவது கொக்கோ கோலா அமெரிக்காவில் செய்த மிகவும் மோசமான செயல் கையும் களவுமாக பிடிபட்டது. உடனே அவர்கள் அமெரிக்காவை விடுத்து ஏனைய நாடுகளில் அந்த ஈனச் செயலைச் செய்யத் தொடங்கினார்கள்.

கொக்கோ கோலாவின் மிகப்பெரிய இலக்கு சீனா. 1970 களில் கம்யூனிச சீனாவுக்குள் நுழைந்த முதலாவது அமெரிக்க நிறுவனம் கொக்கோ கோலா ஆகும். இன்று சீனாவின் குளிர்பான வியாபாரத்தில் ஏறத்தாழ அரைவாசியை கொக்கோ கோலா கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்தக் காலப் பகுதியில் சீனாவில் எடை கூடியவர்கள் அல்லது உடற்பருமன் கூடியவர்களின் எண்ணிக்கை 32 வீதத்தால் அதிகரித்தது என்று உலக சுகாதார நிறுவனம் சொல்கிறது. சீன அரசாங்கம் இதனை நிறுத்த முயற்சித்தது. ஆனால் கொக்கோ கோலா தன்னுடையா செல்வாக்கைப் பயன்படுத்தி, உடற்பருமனைக் குறைக்க குறைந்தளவு குளிர்பானங்களை அருந்த வேண்டும் என்று சொல்வதை விடுத்து மக்கள் உடற்பயிற்சியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று சீன அரசாங்கத்தை சொல்ல வைத்தது. அதாவது, ஒரே தந்திரம், முதலில் அமெரிக்காவில் அடுத்தது சீனாவில்.

**“உலகளாவிய உடற்பருமன் வியாதி சாதாரணமாக உருவானதல்ல. பெருநிறுவனங்களின் பணத்தாசைக்கு துணைபோகும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக உலகின் ஒவ்வொரு மூலைக்கும் அமெரிக்க உணவுப் பழக்கம் ஏற்றுமதி செய்யப்படுகிறது”**

கொக்கோ கோலா இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது. சர்வதேச உயிரியல் விஞ்ஞானக் கல்வி நிறுவனம் (international life sciences institute, ILSI) எனும் இலாபமீட்டாத நிறுவனம் ஒன்றிற்கு கொக்கோ கோலா பணம் வழங்கி வருகிறது. சீனாவில் இந்த நிறுவனத்தின் அலுவலர் களில் சிலர் சீன அரசாங்கத்தின் நோய்க்கட்டுப்பாடு மற்றும் நோய்த்தடுப்பு மையத்தின் உயர் அதிகாரி களாவர். ஒரு சந்தர்ப்பத்தில் ILSI பிரசுரித்த உடற்பருமன் கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்கள் மக்களை உடற்பயிற்சி செய்யுமாறே ஊக்குவித்தன. குளிர் பானம் அருந்துவதைக் குறைக்குமாறு கூறவில்லை. இது எவ்வளவு தூரம் அபத்தமானது!

சீனா சாதாரணமாக எவர் சொன்னாலும் கேட்பதில்லை. ஆனால் கொக்கோ கோலாவுக்கு அடிபணிந்து விட்டதா? சர்வதேச சமூகம் மனித உரிமைகளை மதிக்குமாறு சீனாவிடம் கெஞ்சுகிறது. சீனாவோ அதனைக் கவனிக்கவேயில்லை. திபெத் எங்களுடையது, தாய்வான் ஒரு நாடே அல்ல, முஸ்லிம் மக்களை சிறையில் அடைப்போம் என்று சீனா ஆட்டம் போடுகிறது. ஆனால் கொக்கோ கோலா சீனாவுக்கு நல்லது என்று ILSI சொன்னதை மட்டும் தவறாமல் ஏற்றுக் கொண்டது!

தனக்கு இவ்வாறான செல்வாக்கு சீனாவில் இருப்பதாகக் கூறப்படுவதை ILSI மறுக்கிறது. ஆனால் பல நாடுகளின் சுகாதாரக் கொள்கைகளில் ILSI இன் செல்வாக்கு இருப்பதைக் காணலாம். கொக்கோ கோலா மட்டுமல்ல மற்றும் ஹெர்ஷி, கெலோக், நெஸ்லே, பெப்சி, ஸ்டார்பக்ஸ் (Hershey's, Kellogg's, Nestle, Pepsi, Starbucks) உட்பட்ட பல உணவுற்பத்தி நிறுவனங் களின் நிதியில் இயங்கும் ILSI இந்தியா, பிரேசில் உட்பட 14 நாடுகளில் செயற்பட்டு வருகிறது. ஒன்றுக் கொன்று போட்டி போடும் பெரு நிறுவனங்களான இவை இந்த விடயத்தில் மட்டும் ஒன்றாக செயற்படு கின்றன.

இந்தப் பெரு நிறுவனங்களின் தந்திரங்கள் மட்டும் உலகளாவிய ரீதியில் உடற்பருமன் பிரச்ச னையைத் தோற்றுவித்திருக்க முடியாது. மறு புறத்தில் பார்த்தால், குப்பை உணவுகள் (junk food) மலிவானவை. அவற்றின் விலையைக் குறைத்ததில் அமெரிக்க அரசாங்கத்தின் பங்கு முக்கியமானது. 1970களில் பல்வேறு காரணங்களினால் உணவுப் பொருட்களின் விலை அமெரிக்காவில் பெருமளவு அதிகரித்தது. அதனால் அப்பொழுதிருந்த அதிபர் நிக்சன் அதிகளவு உணவை, முக்கியமாக சோளத்தை உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித் தார். மலிவாகக் கிடைத்த சோளம் நவீன உணவுப் பழக்கத்தை மாற்றிப் போட்டது. புருக்டோஸ் செறிந்த சோளச்சாறு (high fructose corn syrup) பல குளிர்பானங்களில் இனிப்புச்சுவையூட்டியாக மாறியது. இந்தச்சாறு சீனியை விட 20 – 70 வீதம் விலை குறைவாக கிடைத்ததால் குளிர்பான நிறு வனங்கள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கின.

புருக்டோஸ் செறிந்த சோளச்சாறு இனிப் பானது, மலிவானது, நீண்டகாலம் கெடாமல் இருக்கக் கூடியது. அதனாற் தான் அது பெரும்பாலான குப்பை உணவுகளிலும் இனிப்புப் பண்டங்களிலும் உள்ளது. 1970 இற்கும் 1990 இடைப்பபட்ட காலத்தில் புருக் டோஸ் செறிந்த சோளச்சாற்றின் பாவனை 10 மடங்கு அதிகரித்ததாக Environmental Health Pers -pectives நிறுவனத்தின் 2004 ஆண்டு அறிக்கை தெரிவிக்கிறது. அதாவது நீங்கள் ஆரோக்கியமான உணவை உட்கொள்ள முற்பட்டாலும் புருக்டோஸ் செறிந்த சோளச்சாற்றிலிருந்து தப்ப முடியாது. பாண், தயிர், தக்காளிப்பழச் சாறு (bread, yogurt, ketchup) என எல்லாவற்றிலும் இது இருக்கிறது. அமெரிக்காவில் புருக்டோஸ் செறிந்த சோளச்சாறு பயன்படுத்தத் தொடங்கிய 1975 ஆம் ஆண்டளவில் உடற்பருமன் கொண்டவர்களின் எண்ணிக்கை 15% ஆக இருந்தது. 2015 இல் அது 40% ஆக அதிகரித்தது.

அமெரிக்க குப்பை உணவு அமெரிக்காவில் மட்டும் இருந்து விடவில்லை. அது உலகெங்கும் பரந்து அழிவை உண்டாக்கியது. இதற்கு முக்கிய காரணம் திறந்த சந்தைப் பொருளாதாரம் (free trade). திறந்த சந்தைப் பொருளாதாரம் சந்தைப் படுத்தலை ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்கி மக்களின் பொருளாதாரத்தை வளர்க்க உருவாக்கப் பட்டது. அதனூடாக குறைந்த விலையில் பலதரப்பட்ட பொருட்களையும் வாங்கக் கூடியதாக இருந்தது.

எல்லா நாடுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டிருந்தன. பொருளாதாரம் வேகமாக வளர்ந்தது. அதேநேரம், அது தொழிலாளருக்கு பெரும்பாலும் நன்மை செய்ததாக சொல்ல முடியாது. பொருளா தார பலம் மிக்க நாடுகள் பலம் குன்றிய நாடுகளை மிரட்டுவதற்கும் திறந்த சந்தைப் பொருளா தாரம் பயன்பட்டது. குறிப்பாக பணக்கார நாடுகள்

தமது குப்பை உணவை வறிய நாடுகளின் மீது திணிக்கவும் பயன் பட்டது.

உதாரணமாக பசுபிக் கடலில் உள்ள தீவான சமோவாவை எடுத்துக் கொள்வோம். அவர்களின் பாரம்பரிய உணவு, தென்னை, வாழை, கடல் உணவு என மிகவும் ஆரோக்கியமானது. ஆனால் அமெரிக்கர்கள் உண்ண விரும்பாத வான்கோழியின் குதப் பகுதியை பெருமளவில் சமோவாவிற்கு அமெரிக்க பறவைவளர்ப்பு நிறுவனங்கள் ஏற்றுமதி செய்தன. வான்கோழியின் குதப் பகுதி ஒரு விதமான எண்ணெயை சுரக்கும் சுரப்பியைக் கொண்டது. அந்த எண்ணெய் வான்கோழிகளின் இறகுகளை வளவளப்பாக வைப்பதற்கு உதவி செய்யும். இந்த கொழுப்பு நிறைந்த குதப்பகுதியை வான்கோழியின் வால் என்று சொல்லி அமெரிக்க நிறுவனங்கள் சமோவாவில் சந்தைப்படுத்தின. இறைச்சிக்கு தட்டுப்பாடு காணப்பட்ட சமோவாவில் மக்கள் சந்தேகிக்காது அவற்றை வாங்கி உண்டனர். ஒரு கட்டத்தில் ஒரு சாதாரண சமோவா நபர் ஒரு வருடத்தில் 20 கிலோ வான்கோழி குதங்களை உட்கொள்ளும் நிலமை உருவானது. 93% ஆன சமோவா மக்கள் உடல் எடை கூடியவர்களாகவோ அல்லது உடற்பருமன் உள்ளவர்களாகவோ மாறி விட்டனர் (Yale School of Public Health - 2018). சமூக ஆர்வலர்கள் வான்கோழி வால்களின் இறக்குமதியை தடை செய்யுமாறு போராடினர். 2007 ஆம் ஆண்டு சமோவா அரசாங்கம் வான்கோழி வால்களின் இறக்குமதியைத் தடை செய்தது.

ஆனால் அது கனகாலம் நிலைக்கவில்லை. சமோவா பல வருடகாலமாக உலக வர்த்தக நிறுவனத்தில் (world trade organization (WTO)) இணைந்து கொள்ள முயற்சித்து வந்தது. WTO இல் அமெரிக்கா ஒரு பலமான நாடு. அமெரிக்க பறவைவளர்ப்பு நிறுவனங்கள் சமோவாவின் வான்கோழிவால்களின் இறக்குமதித் தடையை வெறுத்தார்கள். வான்கோழி வால்களின் இறக்குமதித் தடையை நீக்கும் வரை WTO இல் இணைவதற்கான சமோவாவின் விண்ணப்பத்தை அமெரிக்கா தடுத்தது. இறுதியில் இறக்குமதித் தடை அகற்றப்பட்டது. இது சமோவாவிற்கு மட்டும் நடக்கவில்லை. அமெரிக்காவுடன் வர்த்தக உடன்படிக்கை செய்து கொண்ட பின்னர் பல நாடுகளின் உணவுப் பழக்கங்கள் சிதைந்து போயின.

1993 ஆம் ஆண்டு அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் திறந்த வர்த்தக உடன்படிக்கை (North American Free Trade Agreement (NAFTA)) ஒன்றில் கைச்சாத்திட்டன. அன்றிலிருந்து உடனடியாக மெக்சிக்கோவின் உணவுப் பழக்கம் சிதையத் தொடங்கியது. விலை குறைந்த சத்தற்ற பதப்படுத்த உணவைக் கொட்டும் பூமியாக மெக்சிக்கோ மாறியது. அவர்களின் உணவுப் பழக்கம் அமெரிக்கர்களை பின்பற்றத் தொடங்கியது. மெக்சிக்கோவின் முதிர்ந்த சமுதாயத்தினர் சமைக்க விரும்பாத ஒரு இளைய சமுதாயம் உருவாகுவதையிட்டு கவலை தெரிவிக்கின்றனர். NAFTA அமெரிக்காவின் சோளக் குப்பை உணவிலும் குளிர்பானத்திலும் மெக்சிக்கோவை மூழ்கடித்தது.

1996 இலிருந்து 2012 வரையான காலப் பகுதியில் புருக்டோஸ் செறிந்த சோளச்சாற்றின் (corn syrup) இறக்குமதி 1200% ஆல் அதிகரித்தது. இதனால் ஏற்பட்ட சுகாதாரக் கேடுகள் பேரழிவானவை. NAFTA விற்கு முன்னர் 34% ஆன மெக்சிக்கர்களே எடை கூடியவர்களாகவோ உடற்பருமன் உற்றவர்களாகவோ இருந்தனர். 2018 இல் இது 75% ஆகக் கூடியது. மெக்சிக்கோவின் முக்கிய ஆட்கொல்லி நோயாக நீரிழிவு இருக்கிறது.

உலகில் அதியுயர்ந்த குளிர்பானப் பாவனை உள்ள நாடாக மெக்சிக்கோ இருக்கிறது. அந்த விற்பனையில் ஒரு நிறுவனம் முன்னணியில் நிற்கிறது. ஆம், அது கொக்கோ கோலா! உலகின் ஆகக் கூடிய கொக்கோ கோலா பாவனையாளராக மெக்சிக்கோ மாறியிருக்கிறது. திறந்த வர்த்தக ஒப்பந்தம் காரணமாக மெக்சிக்கோ அரசாங்கம் தனது மக்களை அமெரிக்க உணவுற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பாதுகாக்க முடியாமல் நிற்கிறது.

சோளச்சாறு இறக்குமதியைக் குறைக்க அதன் மீது இறக்குமதி வரி விதிக்க மெக்சிக்கோ இரு முறைகள் முயன்றது. ஆனால் சமோவாவில் நடந்த அதேமாதிரி WTO அந்த முயற்சியை நிராகரித்தது. ஒரு வர்த்தக உடன்படிக்கை மெக்சிக்கோவிடம் இருந்தாலும் அது தான் நினைத்ததைச் செய்ய முடியாத படி கட்டிப் போடப்பட்டிருக்கிறது. திறந்த சந்தைப் பொருளாதாரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களை வறுமையிலிருந்து விடுபட வைக்க வேண்டும். ஆனால் அது அப்பாவி மக்களை குப்பை உணவில் மூழ்கடிக்கிறது. அவர்களின் ஆரோக்கியத்தை சிதைக்கிறது.

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

வரும் நான்கு மாதங்களுக்குள் வாரத்தில் மூன்று நாட்களாவது எங்கள் நிலத்தில் விளைந்த மரக்கறிகளோடு தான் சாப்பிடுவேன் என சபதமெடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் உண்மையான மாற்றத்தை நோக்கி நகர முடியும். கொரோனா சமூக முடக்கல் காலத்தை பிள்ளைகளோடு சேர்ந்து மரக்கறி பயிர்களை உற்பத்தி செய்வதில் கழிக்க முடியும்.

குறைந்த இடவசதி உள்ளவர்கள் 10 இல் இருந்து 20 வரையிலான நாட்டு கோழிகளை வளர்க்கலாம். மற்றும் குறைந்த பட்ச இடமும் தீவனம் குறைவாகவும் உள்ளவர்கள் ஆடு வளர்ப்பை மேற் கொள்ளலாம். இல்லாவிடின் இடவசதியும், பராமரிக்கும் திறனும் உள்ளவர்கள் மாடு வளர்ப் பையும் மேற்கொள்ளலாம்.

வீட்டுக்கு தேவையான மரக்கறி, பழங்கள், பால், முட்டைகளை பெற்றுக் கொள்வதுடன் எஞ்சியிருப்பதனை பணத்துக்கோ அல்லது பண்ட மாற்று அடிப்படையிலோ அயலவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும், வடபகுதியில் சில இடங்களில் மண் தன்மைக்கு ஏற்ப நெல் பயிர் செய்ய முடியாத நிலங்கள் உள்ளன. அப்படியானவர்கள் நெல் பயிர் செய்கையாளர்களை நேரடியாக தொடர்பு கொண்டு தங்களுக்கு தேவையான நெல்லை பெற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கு பணமாகவோ பண்ட மாற்று அடிப்படையில் பொருட்களை வழங்க முடியும்.

உண்மையான தற்சார்பு பொருளாதாரத்தை நோக்கி எப்போது படிப் படியாக நகர ஆரம்பிக் கின்றோமோ அப்போது எம் வாழ்வில் ஒரு பிடிப்பு, மகிழ்ச்சி அதிகரிக்கும். எங்கள் நிலத்தில் விளைந்தது எனும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போகும். அதனூடாக ஆரோக்கியம் மேம்படும். நாம் உண்ணும் ஒவ்வொரு துளி உணவும் நஞ்சற்றது என்பதனை அதன் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

கொரோனாவின் கோரத் தாண்டவத்துடன் மேற்கு நாடுகளில் உள்ள மக்களில் ஒரு பகுதியினர் கூட இயற்கை விவசாயம், வீட்டு தோட்டம் என தற் சார்பு பொருளாதார நிலையை நோக்கி நகர ஆரம்பித்து விட்டனர். அண்மையில் இணையத் தில் ஒரு காணொலி பார்த்தேன். நெதர்லாந்தைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் மாட்டுப் பண்ணை ஒன்றை வைத்திருக்கின்றனர். இயற்கை முறையில் சிறப்பாக மாடுகளையும் பராமரித்து வருவ தோடு தங்கள் பண்ணை வாயிலில் தானியங்கி பால் கொள்வனவு இயந்திரத்தையும் நிறுவியுள்ளனர். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தூய கொள் கலன்களில் பல்வேறு அளவுகளில் பால் விற்பனை செய்யப் படுகிறது. அயலில் உள்ளவர்கள் மட்டு மல்லாமல் தூர இடங்களில் உள்ளவர்களும் வந்து உடன்பாலை வாங்கி செல்கின்றனர். ஆனால் இப் படியாக பண்ணை வாயிலுக்கே வந்து வாங்கும் மக்களின் தொகை மிக சொற்பமானது என்ற கவலை அவர்களுக்கு உண்டு. தாங்கள் இவ்வளவு உட லுழைப்பையும் செலவு பண்ணி சிரமப்பட்டு பண் ணையை நிர்வகித்து இயற்கையான, ஆரோக்கிய மான பாலை குறைந்த விலையில் நேரடியாக நுகர் வோருக்கு வழங்க முடிந்த போதும் மக்கள் ஏன் பல் பொருள் அங்காடிகளை நோக்கி செல்கின்றனர் என்று அவர்கள் விசனப்படுகிறார்கள். எங்கோ பல பண்ணை களில் சேகரிக்கப் பட்டு, பதப்படுத்தப் பட்டு, பழுத டையாமல் இருக்க இரசாயனங்கள் சேர்க்கப்பட்டு நாட்கணக்கில் சேமிக்கப்பட்ட பின் பால் பல்பொருள் அங்காடிகளுக்கு வருகிறது. அங்கே மக்கள் சென்று வாங்குவதை விட எம்மைப் போன்ற சிறு பண்ணை யாளர்களை ஊக்குவியுங்கள் என்று அவர்கள் கூறு கிறார்கள். நாம் தரமான தூய உடன்பாலை வழங்கு கிறோம். நீங்கள் எங்களிடம் பால் தயிரை வாங்கி ஊக்குவித்தால் எங்களால் மேலும் மேலும் தரமான பாலையும், ஏனைய பால் பொருள் சார்ந்த உற்பத்தி களையும் வழங்க முடியும் என்றனர். இந்தப் பாற் பண்ணையாளரின் நிலை மேற்கு நாடுகளில் மட்டுமல்ல இங்கேயும் உள்ளது.

கடந்த ஒரு மாதமாக இலங்கையில் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனை தொடர்ந்து காலையில் எழுந்து ஒரு கரண்டி பால்மாவை கலக்கி குடிப்பவர்களின் நிலை பரிதாபத்திற்கு உள்ளாகியுள்ளது. பால்மாவை தேடியலைந்து சில இடங்களில் மிக அதிக மாக விலை கொடுத்து வாங்கும் நிலை உள்ளது. இந்த அவலத்திற்கு யார் காரணம்? இதற்கு காரணம் நாங்களே தான். நாளாந்தம் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்

கான லீற்றர் பால் தென்னிலங்கையின் பிரபல பால்பொருள் உற்பத்தி நிலையங்களை நோக்கி செல்கின்றது. பின் அங்கேயிருந்து பதப்படுத்தப் பட்ட பாலாக, சுவையூட்டப்பட்ட பாலாக, தயிராக, யோகர்டாக வடபகுதியை நோக்கி வருகிறது. இதனை எமது மக்கள் முண்டியடித்து வாங்கு வதனையும் அவதானிக்கலாம். அதிகம் குழந்தை களுக்கும் வாங்கிக்கொடுக்கின்றனர்

ஆடு, மாடு வளர்க்க முடியாதவர்கள் குறைந்த பட்சம் அருகிலுள்ள பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங் களுக்கு நேரடியாக சென்று உடன்பாலை கொள்வனவு செய்யாமல் பால்மாவைப் பயன்படுத்தப் பழகிய தனால் இன்று பெரும் இடர்களை எதிர்கொள் கின்றனர். தமிழ்நாட்டில் பால்மாவை வாங்க முடியாது. காலையில் வீடுகளுக்கே உடன் பால் பைகள் வந்துவிடும் நிலை உள்ளது. தமிழ்நாடு அரசின் ஆவின் பாலகங்களுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு உண்டு. அதிகளவில் மக்கள் கூடும் இடங்களில் ஆவின் பாலகங்களின் சிறிய கடைகள் மூலம் சூடான பால், யோகர்ட், பாலில் செய்யப்பட்ட குளிர்களி போன்றவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெ யில் மனித உடலுக்கு ஆபத்தான இரசாயனங்கள் சேர்க்கப்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளி யானது. அதனைத் தொடர்ந்து மக்களில் பலரும் சொந்தமாக தேங்காயெண்ணையை உற்பத்தி செய்ய தொடங்கியதோடு மீதியை தங்கள் நண்பர்கள், அயலவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளும் நிலையும் உருவானது. உண்மையிலேயே நல்ல தொரு முயற்சி இது. ஏனெனில் எமது பிர தேசங்களில் உள்ள தேங்காய் வெளி மாகாணங் களுக்கு போகாது விடின் அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் எம்மக்களுக்கு போதுமானது.

கொரோனா வைரஸ் பல்வேறு திரிபுகளுடன் உலகெங்கும் பரவி வருகுறது. இந்த அபாய நிலை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என விஞ் ஞானிகளால் கூட எதிர்வு கூற முடியாத நிலை உள்ளது. ஏற்கனவே போரில் பெரும் உயிரழிவு களையும், சொத்தழிவுகளையும் சந்தித்த எம் மக்கள் தற்சார்பை நோக்கி நகர ஆரம்பிக்க வேண்டும். இனியும் தற்சார்பு வாழ்க்கைக்கு செல்லாவிடின் தவிக்க விடப்படுவோம் என்பதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

---

**(25 ஆம் பக்க தொடர்ச்சி)**

அமைந்துள்ள பாலம் வருடாந்தம் உடைப்பெடுக்கும். இவ்வீதியும் ஒடுங்கிய சிறிய வீதியாகத்தான் இதுவரையில் இருந்து வருகின்றது. நாங்கள் தோணி கள் மூலம்தான் ஏனைய பிரதேசத்திற்கு போக்கு வரத்துச் செய்து தேவைகளை சிரமத்தின் மத்தியில் பூர்த்தி செய்து கொள்வோம். சில வேளைகளில் இப்பயணம் ஆபத்துக்கள் மிகுந்ததாக இருக்கும். எனவே, இவ்வீதியில் அமைந்துள்ள பாலத்தை உயர்த்தி நிர்மாணிக்க வேண்டும். கடந்த காலங்களைவிட மாரி காலத்தில் அதிகளவு வெள்ளம் வந்தால் எமது கிராமம் முற்றாக மூழ்கிப்போகும் அபாயத்தில் உள்ளது.

423 குடும்பங்கள் வசிக்கும் நிலையில் 30 பேரிடம் மாத்திரம்தான் இயந்திரப் படகுகள் உள்ளன. எனவே, எமது கிராமத்தில் எமது மக்களுக்கு பயனளிக் கக் கூடிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டும். சுற்றுலாத்தலமாகவும் எமது கிராமத்தை மாற்ற முடியும். எமது கிராமத்தின் பிரதான வீதி உள்ளிட்ட அனைத்து வீதிகளும். மணல் மற்றும் கிறவல் வீதிகளாகத்தான் உள்ளன. கோறளைப் பற்று பிரதேசத்தில் அதிகளவு நிலப்பரப்புக் கொண்ட கிராமம் எங்களது கிராமம்தான். இங்கு முறையான வடிகாலமைப்பு வசதிகள் செய்யப்படவில்லை, வீதிக் கட்டமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது மிக மிகக் குறைவாகும்.

சுனாமிக்கு முன்னர் எமது கிராமத்தில் கல்வீடு கள் மிகக் குறைவாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது கிராமத்திற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பிரித்தானிய செஞ்சிலுவை சங்கம் ஏராளமான வீடுகளை கட்டிக் கொடுத்தனர். ஆனால் அவ்வீடுகளைக் கட்டிய ஒப்பந்தக்காரர்கள் அவற்றை முறையாக கட்டிக் கொடுக்காததனாலும், அவை பொருத்தமற்ற முறையில் கட்டப்பட்டதனாலும், தற்போது அந்த வீடுகள் அனைத்தும் உடைந்துபோய் உள்ளன. இதனால் எமது கிராமத்தில் 87 பேர் ஓலைக் குடிசைகளிற்தான் வாழ்ந்து வருகின்றார்கள்.

121 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள்கூட இல்லாமலுள்ளன. அதுபோல் பலமுறை தெரிவித்தும் எமக்கு இன்னும் சுத்தமான குடி நீர் வசதியை யாரும் ஏற்படுத்தித் தரவில்லை. இவ்வாறாக தமது கிராம மக்களின் உள்ளக்கிடக்கைகளை என்னிடம் கொட்டித் தீர்த்தார் நாசிவன் தீவுக் கிராமத்தின் வளர்பிறை சனசமூகத்தின் தலைவர்.

மனிதன் வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையல்லவா. இவ்வாறு அடிப்படை வசதிகளுக்கான மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்ற போது அவை எதிர்காலத்தில் அனைவரையும் கேள்விக்குட்படுத்தும் என்பதையும் துறைசார்ந்த அதிகாரிகள் நன்கு அறிந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

நாசிவன்தீவு கிராம மக்களின் உள்ளக் கிடக்கைகளைப் பார்க்கின்றபோது, அக்கிராமம் பற்றிய அக்கறை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் கண்களுக்குப் புலப்படுவதென்பது மிகவும் கடினமானதாகவே உள்ளதாக அறியமுடிகின்றது. எது எவ்வாறு அமைந்தாலும், தமது வாழ்வாதாரத்திற்கு இன்னலுறும், நாசிவன்தீவு கிராம மக்களை கைகொடுத்து எழுப்பிவிட வேண்டிய தேவை உள்ளது. சுற்றுலாத்துறைக்கு ஏற்ற வசதிகள் இருந்தும், அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவது எட்டாக்கனியாக இருக்கும் அந்தக் கிராம மக்களின் முயற்சிகளுக்கு உந்து சக்தியளிப்பது யார் எனத் தெரியாதுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது கிராமத்தில் பல வளங்கள் இருந்தும் மத்திய கிழக்கு நாடுகளில் கூலிக்கு மாரடிக்கும் இளைஞர்களுக்கு கிராமத்திலேயே தொழில் வழங்கக் கூடிய முயற்சிகளை செய்ய யார் முன்வருவார்கள் எனவும் அந்தக் கிராம மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

“எமது பிரதேசத்திற்குட்பட்ட நாசிவன்தீவுக் கிராமம் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய கிராமம் தான். இந்த கிராமத்திற்கான படகுச்சேவையை வெள்ளம் வரும் காலத்தில்தான் அவர்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர். ஏனைய காலங்களில் அக் கிராமத்து மக்கள் கிராமத்திலிருக்கின்ற வீதியூடாகத்தான் போக்குவரத்துச் செய்து கொள்கின்றார்கள். அவர்கள் வசம் இருக்கின்ற போக்குவரத்துப் படகு பழுதடைந்துள்ளது. அதனை அவர்கள் எனக்கு தெரியப்படுத்தவில்லை. ஆனாலும், எமது வெளிக்கள உத்தியோகத்தரை அனுப்பி அவதானித்துவிட்டு, அதனைச் சீர் செய்து கொடுக்க நான் நடவடிக்கை எடுக்கின்றேன்.

வடிகாலமைப்பு வசதியை உடனடியாக செய்து முடிக்க இயலாது. வருடாந்தம் வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களினூடாக வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். வீடமைப்பு அதிகாரசபையினால் ஒரு வீட்டுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அரசாங்கத்தினூடாக வருகின்ற வீட்டு வசதிகளை அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்க முடியும். எதிர்காலத்தில் வரும் திட்டங்களூடாக வீதிகளையும், செப்பனிடுவதற்கு முன்மொழியலாம். அதுபோல், அரச சார்பற்ற நிறுவனங்களையும், அக்கிராமத்தில் வேலை செய்வதற்கு இணைப்புச் செய்துள்ளோம். ஒட்டு மொத்தத்தில் பின்தங்கிய கிராமம் என்ற ரீதியில் அக்கிராமத்தை அதிகளவு கரிசனையில் எடுத்துத்தான் நாங்கள் செயற்படுகின்றோம்”. என கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேசத்தின் பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கிராமத்தின் அபிவிருத்தி பற்றி கடந்த காலங்களில் பல ஊடகங்களில் பல கட்டுரைகளும், செய்திகளும் வெளிவந்திருந்த நிலையில், பல்வேறு அரசியல்வாதிகளும் அக்கிராமத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் பற்றியும், மண் அகழ்வு பற்றியும், ஆராய்ந்துள்ளனர்.

நாசிவன்தீவுக் கிராம மக்கள் மீது அக்கறை கொண்டு செயற்படும், மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும், அதீத அக்கறை செலுத்தி செயற்படுகின்ற பட்சத்தில் அக்கிராம மக்களும், ஏனைய கிராம மக்களுக்கு ஒப்பான வகையில் தமது வாழ்வைக் கொண்டு நடத்தாவிட்டாலும், ஓரளவுக்கேனும், தம்மை வளப்படுத்திக் கொண்டு வாழ்வை நகர்த்தலாமென எண்ணுகின்றார்கள். அம்மக்களின் எண்ணங்கள் ஈடேறுகின்றவரை எமது பார்வையும், அக்கிராமம் மீது இருந்து கொண்டே இருக்கும்.

**நன்றி: கல்முனை நெட்**

# நாசிவன் தீவு - அடிப்படை வசதிகளின்றி தத்தளிக்கும் கிராமம்








வ.சக்திவேல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப் பக்கமாக மட்டு நகரிலிருந்து சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது கோரளைப் பற்று (வாழைச்சேனை) பிரதேசமாகும். இந்த வாழைச்சேனைப் பிரதேசத்தில் நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட பகுதிதான் நாசிவன்தீவு கிராம மாகும். அக்கிராம மக்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

"எமது கிராமம் கோறளைப்பற்றுப் பிர தேசத்தின் வடக்கு எல்லைக் கிராமமாகும். கோறளைப்பற்றுப் பிரதேசத்திலிருந்து நிலத் தொடர் பற்ற ஒரு தீவுப்பகுதிதான் இது. இந்த மக்களின் பிரதான தொழில் மீன்பிடியாகும். அதிலும் குறிப்பாக 75 சதவீதமானவர்கள் வாவி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனையவர்கள் கடல் மீன்பிடி யில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் தொகை குறைவாக இருந்த காலத்தில் இந்த வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு போதிய வருமானம் இருந்து வந்தது. தற்போது சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க, வாவியில் மீன் பிடிபடுவது குறைவடைந்து வருகின்றது." இவ்வாறு தெரிவித் தார் நாசிவன்தீவு கிராமத்தின் வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவர். அல்லல்படும் இந்தக் கிராமத்தின் நிலை குறித்து அவரிடம் நாம் வினவி னோம்.

யுத்தக்காலத்தில், வெளியிடங்களுடனான தொடர்புகள் மிகக் குறைந்த அளவிலேதான் எமக்குக் காணப்பட்டிருந்தன. சுற்றிவர வாவி அமைந்துள்ள தனாலும், வாவியில் மீன்பிடியைப் பழகிக் கொண்ட தனாலும், ஏனைய தொழில்களை எமது கிராம மக்கள் பழகிக் கொண்டது குறைவு. அதேவேளை, எமது கிராமத்தில் கல்வி வளர்ச்சி நிலைமையும் குறைவுதான். இங்கு பாடசாலை ஒன்று உள்ளது. ஆனால், எமது கிராமத்தைச் சேர்ந்த எவரும் ஆசிரிய ராக இல்லை. அனைத்து ஆசிரியர்களும் வெளி இடங்களிலிருந்து இங்கு வந்து கடமையாற்றுகி றார்கள். அவர்கள் படகிலே வாவியைக் கடந்து வந்து கற்பித்து விட்டு மீண்டும் படகிலே திரும்பிச் செல்கிறார்கள். மேலும், இது ஒரு கஷ்டப் பிரதேச மாக இருப்பதனாலும், எவரும் இங்கு விருப்பத் துடன் கற்பிக்க வருவதற்குத் தயங்குகிறார்கள். எமது கிராமத்தில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் படித்தவர்களாக இருக்கின்றார்கள்.

எமது கிராம மக்களின் வாழ்வாதாரம் வாவியுடன் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் ஏனைய தொழில்வாய்ப்புக்கள் இல்லை. யுத்தத்திற்குப் பின்னர் வந்த மாற்றங்களால் எமது கிராமத்து இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் மலிவான கூலிகளாக தொழிலுக்குச் செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது கிராமத்தில் 423 குடும்பங்கள் உள்ளன. இக்குடும்பங்களிலிருந்து 89 பேர் மத்திய கிழக்கில் வேலை செய்கின்றார்கள்.

அண்மையில், எமது சகோதர சமூகத்தைச் சேர்ந்த தனி நபர் ஒருவரால் சிறியரக உரப்பைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று உருவாக் கப்பட்டுள்ளது. அதில் ஏனைய கிராமங்களையும் ஒன்றிணைத்து 70 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கியுள்ளார்கள்.

எமது கிராமத்திற்கு வருவதற்கும் போவதற் கும் ஒரே ஒரு வீதிதான் உள்ளது. அதுவும் வெள்ள அனர்த்த காலத்தில் துண்டிக்கப்பட்டு விடும். அதில்

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 27.09.2021 அன்று வெளியிடப்பட்டது.